விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 13 வெள்ளிக்கிழமை (27.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 039

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## 13+ தான் செனட் சபை

## அரசு நேற்று அறிவிப்பு

(கொழும்பு), ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 13ஆவது அரசியல் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் என்பது செனட் சபையையே குறிப்பதாக அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வு என்றால் என்ன? அதனை அரசு நடைமுறைப்படுத்துமா? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் தேசியப் பிரச்சினைக்கு தீர்வொன்றை காண வேண்டும் என்பதில் உண்மையிலேயே அரசாங்கம் திடமாகவுள்ளது. 13-ம் திருத் திற்கும் அப்பால் செல்லும் நிலையில் அரசாங்கம் உள்ளது என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.

அரசியல் தீர்வு விடயத்தில் அரசு காலம் கடத்தவில்லை தமிழ் (20ஆம் பக்கம் பார்க்க)

## செனட் சபையை ஏற்றுக்கொள்ள முடியாது

### கூட்டமைப்பு திட்டவட்டம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழியின் பிரகாரம் 13 வது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகாரப்பரவலாக்கல் என்பது செனட் சபை எனில் அதனை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

13 வது திருத்தத்துக்கு அப்பால் அதிகாரப் பகிர்வு என்பது செனட் சபையே என அரசாங்கம் தெரிவித்துள்ளது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவை ஏமாற்றுவதற்கு அரசாங்கம் செனட் சபை தொடர்பில் விளக்கமளிக்கலாம். ஆனால் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாநகரசபை ஆளும் கட்சி உறுப்பினர் பதவி நீக்கம்

யாழ். மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினராக பதவி வகித்த சுவீகரன் நிஷாந்தனின் உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையின் இந்த வருடத்திற்கான முதலாவது மாதாந்த பொதுக் கூட்டம் நேற்று முதல்வர் தலைமையில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாநகர (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்படாது

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தகவல்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கை, ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையகத்திடம் சமர்ப்பிக்க மாட்டாது என வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத் தொடரில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா? என ஊடகவியலாளரொருவர் நேற்று வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வினவியதற்கே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடந்து கருத்துத் தெரிவித்த அவர், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்திடம் சமர்பிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அத்துடன் அது தொடர்பிலான எந்த எண்ணமும் இலங்கை அரசுக்கில்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஓர் உள்நாட்டு ஆணைக்



குழுவாகும். குறித்த ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளு (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகளை புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றுக!

### ஜனாதிபதியிடம் மனோ கணேசன் கோரிக்கை



மகசின் சிறையில் இடம்பெற்ற கலகத்தை அடுத்து அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அங்கும் அவர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றனர்.

இதனால் அவர்களை புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றுவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

இதுதொடர்பாக (20ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் மாணவி கொலை

## இரு சந்தேக நபர்களுக்கு வலைவீச்சு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவமானது பழி வாங்கல் நடவடிக்கை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இருவர் தேடப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறை சக்கோட்டையில் நேற்று முன்தினம் இரவு அல்வாய் வடக்கு றோ.க. த.க. பாடசாலை மாணவியான இருதயநாதர் மேரி டிலக்சனா (வயது 17) என்ற மாணவி இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு வீட்டுக்கு அருகில் உள்ள இடத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் குடும்பப் பகை காரணமாக பழிவாங்கும் நோக்கிலேயே குறித்த மாணவி கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் (20ஆம் பக்கம் பார்க்க)

## மகசின் சிறையில் புலிச் சந்தேக நபர்களின் ஆவணங்கள் அழிவு

புதிய மகசின் சிறைச்சாலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் காரணமாக ஆயிரத்து 800 சிறைக் கைதிகளின் மிக முக்கியமான ஆவணங்கள் முற்று முழுதாக அழிவடைந்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் ஜீ.டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் 181 உறுப்பினர்களின் ஆவணங்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோதல் இடம்பெற்ற சம்பவத்தில் ஆத்திரமடைந்த கைதிகள் ஆவணங்களைத் தீயிட்டுக் கொளுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் போர்க் குற்ற விசாரணைக்கு ஆதரவு வழங்க இந்தியா தவறிவிட்டது

### மனித உரிமை கண்காணிப்பகம் சாடல்

(கொழும்பு)

இலங்கை மற்றும் மியான்மார் போன்ற தனது அயல் நாடுகளில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைகளுக்கு ஆதரவு தெரிவிக்கக் கூடிய வாய்ப்புக்களை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை மற்றும் மனிதவுரிமைகள் ஆணைக் குழு ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் இந்தியா தவறவிட்டுள்ளதாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான உலக மனிதவுரிமைகள் நிலைமைகள் குறித்து நியூயோர்க்கை தளமாகக் கொண்டியங்கும் மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் 90 நாடுகளின் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தால் 676 பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தியா தொடர்பிலான (20ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாணய நிதியம் கவலை

இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நாட்டின் மோசமான பொருளாதார நிலைமைகளினால் சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்படவிருந்த கடன் தொகை தாமதப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

2009ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணயத்திடம் 2.6 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை கோரியிருந்தது. (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய மங்களநேசன் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்யப்போவதாக ஆளும்கட்சி உறுப்பினரான அ.மனுவல் மங்களநேசன் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்திற்கான யாழ். மாநகர சபையின் முதலாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று சபையின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது ஆளும் கட்சி உறுப்பினரான மங்களநேசனும் சமுகமளித்திருந்தார். இதன்போது கருத்துத்தெரிவித்த மனுவல் மங்களநேசன்,

மாநகர சபையின் நிலையியற் குழு அங்கத்தவர் தெரிவில் தமது பெயரையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரேரித்திருந்தனர்.

இருப்பினும் முதல்வர் தன்னிச்சையாக அங்கத்தவர்களை தெரிவு செய்துள்ளார்.

இது தவிர பலமுறை சட்டத்தை மதிக்காது தன்னிச்சையாக முடிவெடுத்துள்ளார்.

எனவேதான் யாழ்.மாநகர சபையின் உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வது என தீர்மானித்துள்ளேன் என அவர் குறிப்பிட்டார்.

எப்பொழுது ராஜினாமா கடிதம் கொடுக்கப்போகின்றீர்கள் எனக் கேட்டபோது இன்று (நேற்று) இரவு கொடுக்கப் போகின்றேன் எனத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா-6)

# யாழ். மாநகரசபை கூட்டத்தில் எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்திலிருந்து எதிரணியினர் வெளிநடப்பு செய்தனர்.

இந்த வருடத்திற்கான யாழ். மாநகர சபையின் முதலாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முதல்வர் திருமதி யோகேஸ்வரி சற்குணராசா தலைமையில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின்போதே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர். யாழ்.மாநகர சபையின் இந்தவருடத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் என்பதனால் நேற்று சபையின் நிலையியற் குழுக்களின் உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது.

இந்த உறுப்பினர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான மு.றெமிடியஸ், என்.இராஜதேவன், அ.கொர்னேலியஸ், அ.பரஞ்சோதி, பெ.ஜேக்கப், கா.ந.கனகரத்தினம், அ.மேரியம்மா, அ.மரியகொரற்றி, இ.சங்கையா ஆகியோரினால் பிரேரிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை நீக்கியதோடு முதல்வர் தான் நினைத்தவாறு தன்னிச்சையாக உறுப்பினர்களை நியமிக்க முற்பட்டதனால் தாம் இந்தக் கூட்டத்தொடரிலிருந்து வெளிநடப்பு செய்ய நேரிட்டதாக எதிரணியினர் தெரிவித்தனர்.

அத்தோடு முதல்வரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை ஏற்க முடியாது எனவும் தாம் சமுகமளிக்காத நிலையியற் குழுக்களின் உறுப்பினர்கள் தெரிவில் எமது பெயர்கள் இடம்பெறுவதை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சட்டத்துக்கு முரணான இந்த உறுப்பினர்கள் தெரிவு செல்லுபடியற்றதாகும். அப்படி இக்குழுக்களை இயக்க முற்பட்டால் நாம் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும் எனவும் யாழ்.மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் 9 மாநகர சபை உறுப்பினர்களும் கையொப்பமிட்டு அறிக்கையொன்றை ஆணையாளரிடம் ஒப்படைத்ததோடு அந்த அறிக்கையின் பிரதியை ஊடகங்களுக்கும் வழங்கினர்.

இவ்வாறு எதிரணியினர் கூட்டத்தை விட்டு வெளிநடப்பு செய்தது தொடர்பாக யாழ்.மாநகரசபை முதல்வர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாநகரசபையினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் தாம் பங்குகொள்ள போவதில்லை என கடந்த வருட டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற 2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட கூட்டத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறு யாழ்.மாநகரசபையின் அபிவிருத்தித்திட்டத்தில் பங்குபற்றுவதில் விருப்பம் இல்லாதவர்களை நிலையியற் குழுக்களில் எவ்வாறு இணைக்க முடியும்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்குகொள்ளாதபடியால் அமைதியாக எந்தவிதப் பிணக்குகளும் இன்றி கூட்டம் நடைபெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (பா-6)

# வெளிநாடு அனுப்பி வைப்பதாக பெண் ஒருவரை ஏமாற்றிய தம்பதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புறநகர் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரை வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்புக்கு அனுப்புவதாக கூறி கொழும்புக்கு கூட்டிச்சென்ற தம்பதிகள் அவரை பலாத்காரம் செய்ய முயன்ற போது அப் பெண் தப்பியோடி பேலியகொட பொலிஸில் தஞ்சம் புகுந்துள்ளார். இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் பேலியகொட பொலிஸாரால் பிரஸ்தாப பெண், யாழ்ப்பாண பொலிஸார் ஊடாக உறவினர்களுடன் இணைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இம் மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதியினர், வறுமை நிலையிலுள்ள பெண்களையும் வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் பெண்களையும் வெளிநாட்டில் சம்பளத்துடன் வேலை பெற்று தருவதாக கூறிவந்துள்ளனர்.

இதனையறிந்து அவர்களுடன் கொழும்பு சென்ற யாழ். புறநகரைச் சேர்ந்த பெண் ஒருவர் மேற்படி தம்பதியினருடன் தொடர்புடைய குழுவொன்றினால் பலாத்தகாரப்படுத்த முயற்சி செய்யப்பட்டுள்ளது.

இதனால் தப்பிக்க நினைத்த குறித்த பெண், பேலியகொட பொலிஸில் தஞ்சமடைந்துள்ளார்.

இந்நிலையில் பேலியகொட பொலிஸார் யாழ்ப்பாண பொலிஸார் ஊடாக குறித்த பெண்ணை அவரின் குடும்பத்துடன் இணைத்துள்ளனர்.

அத்துடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பேலியகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (பா)

## ஹபரணை விபத்தில் பிரதி அமைச்சர் காயம்

(கொழும்பு)

சமூக சேவைகள் பிரதியமைச்சர் சந்திரசிறி சூரியாராச்சி ஹபரணையில் நேற்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்தார்.

பொலநறுவ நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதே பிரதியமைச்சரின் வாகனம் ஹரிவாதுண என்ற இடத்தில் விபத்துக்குள்ளானது.

கையில் காயம் அடைந்த பிரதியமைச்சர் சந்திரசிறி சூரியாராச்சி பொலநறுவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

# 11 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் வழக்கு

(யாழ்ப்பாணம்)

நிர்ணயித்த விலையிலிருந்து அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் 11 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு நுகர்வோர் அதிகார சபையினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சோடா, பனபோல், பால்பைக்கற் உட்பட்ட நுகர்வுப் பொருட்களை நிர்ணயித்த விலைக்கு அதிகமான விலையில் விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டு மேற்படி 11 வர்த்தகர்களுக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ளது. (பா-4)

# கந்தர்மடத்தில் விபத்து இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இருவாகனங்களும் பலத்த சேதமடைந்ததுடன் அதில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று காலை 11.30 மணியளவில் நல்லூர் கந்தர்மடம் சைவப்பிரகாச பாடசாலைக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நல்லூரில் இருந்து வந்து கொண்டிருந்த மோட்டார்சைக்கிளொன்றும் விபத்துச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் ஒருவரை இறக்கி விட்டு நல்லூர் பகுதியை நோக்கி திருப்ப முயன்ற ஆட்டோ ஒன்றுமே விபத்துக்குள்ளாகியது.

இதில் நல்லூர்ப்பகுதியைச் சேர்ந்த ஒருவரும்பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த ஒருவரும் காயமடைந்துள்ளனர். (பா-4)

# வாள் வெட்டு; இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இனந் தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயம் அமைந்த இளைஞன் ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் நாவாந்துறை கனடி வீதியைச் சேர்ந்த அல்வின் சுரேஸ்குமார் (வயது 30) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

யாழ். ஒஸ்மானியா கல்லூரிக்கு அருகில்வைத்துநேற்றிரவு 7.15 மணியளவில் இனம்தெரியாதோரின் வாள் வெட்டிற்கு பிரஸ்தாப இளைஞன் இலக்காகியுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (பா-11)

# மகரிஷி பாம்பாட்டி சித்தரின் சீடர் நயினை வருகை

(நயினாதீவு)

நயினை நாகபூசணி அம்மனின் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதற்காக மகரிஷி பாம்பாட்டிச் சித்தரின் சீடர் சிவயோகி மாணிக்கம் சிதம்பரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்.

தமிழ்நாடு கொல்லிமலையில் ஐந்துதலை பாம்பை அழைத்து பேரற்புதங்கள் புரிந்து வரும் மகரிஷி பாம்பாட்டி சித்தரது இச்சீடர், மகா குண்டலினி இறை மருத்துவ பீடத்திலிருந்து குருநாதரின் அருள் ஆணையின் வண்ணம் மகாகுண்டலினியும் ஒப்புயர்வற்ற தலமான நயினை நாகம்மாவின் திருக்குட முழுக்கு விழாவில் கலந்து கொள்வதற்காக சித்தர் சிவயோகி மாணிக்கம் சிதம்பரம் நேற்று காலை யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

நயினை நாகம்மாவின் அருள் வளாகத்தில் நாளை மறுதினம் வரை தங்கி திருக்குட முழுக்கில் சிறப்பிப்பதுடன் அடியார்களுக்கும் அருள் ஆசி வழங்கவுள்ளார். (பா)


ஆண்மைக்குறைவா? குழந்தையின்மையா?
எயிட்ஸ் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்!

23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்



உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை
பெண்களுக்கான மாதப்பிரச்சனை, கருமுட்டை உற்பத்தியின்மை, வளர்ச்சியின்மையால் பாதிப்பா?
தாம்பத்தியக் குறைபாடா?
கவலை வேண்டாம்.



தூக்கத்தில் சக்தி வெளியாதல், விரைவில் வெளியாதல், தன்னால் முடியாமல் என்ற பயமா? திருமணத்துக்கு தயாராகும் வாலிபர்களே இந்தப் பயத்திலிருந்து விடுபட்டு 45 நாட்களில் முழு ஆண்மையும் பெற்று முழுமயான வளர்ச்சியில் நீண்ட நேரம் இன்பம் பெறுவது உறுதி. எந்த வயதினராலும் சரி எந்த நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி பலன் பெறுவது உறுதி.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.ம.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். (பெண்கள் மட்டும்)

செல்: 0091 9842457673

100% உறுதி
மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

யாழ் வருகை 29.012012 காலை 9மணி தொடக்கம் மாலை 5மணி வரை டாக்டரை நேரடியாக சந்திக்கலாம்.

Website: www. Sexualproblem.in
Email: sridevisiddha@gmail.com



செல் : 0091 9600336009
இலங்கை செல்: 0754 518 639

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
APGraphic



மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

இடம் : பெரியவிளான் சவாரித்திடல், பண்டத்தரிப்பு
காலம் : 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 01 மணி

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெரியவிளான்,
பண்டத்தரிப்பு. - விவசாயிகள்

(C-5682)


## அறிவித்தல்

யா/ அல்வாய் வடக்கு றோ.க. த.க. பாடசாலையில் 28.01.2012 நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த இல்ல மெய்வன்மைப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

- பாடசாலைச் சமூகம்

(C-5680)


DMI- ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
புவியியல் ↦ N. பாபு
A/L - 2012
♦ விவசாயத் தொழில்நுட்பம் (சனி, ஞாயிறு - 9 am)
♦ கைத்தொழில்கள் (சனி, ஞாயிறு - 11 am)
♦ இயற்கை அனர்த்தங்கள் (சனி, ஞாயிறு - 12 noon)
புதிய அலகுகள் ஆரம்பம் 28.01.2012
புதிய அனுமதிகள் வழங்கப்படும்
(7383)



'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY : 077 3212711
வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர்



வர்த்தகப் பெருமக்களே
வியாபாரத்தை பதிவு செய்தல்
BUSINESS REGISTRATION
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL Management Services (Pvt) Ltd
No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-9994777/011-7902938/011-4343339

# இன்று ஒரு தகவல்

## மனிதனும் மிருகமும்

ஒரு பெரிய காடு. அங்கே ஒரு சிங்கம் இருந்தது.

ஒரு நாள் காலை நேரம் அந்தச் சிங்கத்திற்குப் பசியெடுத்தது. உடனே குகையை விட்டு வெளியே வந்தது.

ஏதாவது இரை கிடைக்குமா என்று இங்கேயும் அங்கேயும் பார்த்துக் கொண்டு வந்தது.

ஓர் ஆற்றுப்பக்கமாக வந்தது. அங்கே ஓர்அழகான மான்.

அப்போதுதான் அது ஆற்றிலே குளித்து விட்டு சுத்தமாக வந்து கொண்டிருந்தது. பார்ப்பதற்கு நல்ல கொழுகொழுவென்று இருந்தது.

"ஆகா... அருமையான சந்தர்ப்பம்... அதை அடித்து சாப்பிடலாம்"

சிங்கம் மெதுவாக அதனைப் பின் தொடர்ந்தது.

இந்தச் சமயம் பார்த்து நரி ஒன்று அந்தப் பக்கமாக வந்தது.

அதற்கும் அந்த மானை சாப்பிடுவதற்கு ஆசை.

ஆனால், சிங்கம் அதை சாப்பிட்டுவிட்டால் அதற்கு கிடைக்காமல் போய்விடும்.

சிங்கம் அந்த மானை சாப்பிடக்கூடாது.அதற்கு என்ன செய்யலாம் என்று யோசனை செய்தது.

நரி தந்திரமாக ஒரு யோசனை செய்தது. மெதுவாக அந்தச் சிங்கத்தின் அருகில் சென்றது.

"சிங்கராஜா! ஒரு விடயம் சொன்னால் நீங்கள் பிழையாக நினைக்கக் கூடாது."

"என்ன சொல்லுகிறாய்?"

"அது வந்து... ஒன்றுமில்லை... குளித்து விட்டு வரும் மானை அடித்துச் சாப்பிட்டால் பதவிக்கு ஆபத்து வரும் என்று சாஸ்திரத்தில் சொல்லப் பட்டுள்ளது..."

"அப்படியா?"

சிங்கம் பயப்பட ஆரம்பித்தது.

"நல்ல வேளை! சரியான நேரத்திலே வந்து என்னிடம் சொன்னாய். வா என் கூட இரண்டு பேரும் பேசிக்கொண்டே போகலாம்"

நரிக்கு மறுபடியும் சிக்கல்.

" மெதுவாக இந்த சிங்கம் வேறு இரை தேடி போய்விடும். இந்த மானை பிடித்துக்கொள்ளலாம் "என்பது நரியின் திட்டம்.

ஆனால், சிங்கம் நரியை விடுகிறபாடில்லை. கூடவே அழைத்துக் கொண்டு சென்றது.

இதற்கிடையில் அந்த மான் தப்பிச் சென்றது.

இது இரண்டும் நடந்து போய்க்கொண்டே இருக்கிறது.

இந்த நேரத்தில் நரிக்கு நல்ல பசி வயிற்றைக்கிள்ளியது.

உடனடியாக எதையாவது சாப்பிட்டு விட வேண்டும் போல இருந்தது. என்ன செய்வது?

மறுபடியும் ஒரு யோசனை

"சிங்கராஜா!" என்றது.

"அது என்ன" என்று கேட்டது.

குளித்து விட்டு வருகிற மானைக் கொன்றால் பதவிக்கு ஆபத்து என்பது உண்மைதான். ஆனால், அதற்கு ஒரு பரிகாரம் உண்டு... அதுவும் சாஸ்திரத்திலே இருக்கிறது."

"என்ன பரிகாரம்?"

"நீங்கள் நடந்து போகும் எதிரிலே வரும் முதல் ஐந்து மிருகங்களை கொல்ல வேண்டும்." ஆனால்... சாப்பிடக்கூடாது... நாள் முழுவதும் விரதம் காக்க வேண்டும்.

இது இரண்டும் இப்படிக் கதைத்துக் கொண்டு போகும் போது பக்கத்திலே ஒரு புதரில் மறைந்திருந்த ஒரு முயலின் காதிலே இக்கதை விழுந்து விட்டது.

"ஆகா... ஆபத்து!" என்று புரிந்து கொண்டது அந்த முயல்.

உடனே ஓடிப்போய் காட்டிலே இருக்கிற எல்லா மிருகங்களிடமும் இந்தத் தகவலை சொன்னது.

எல்லா மிருகங்களும் முன்னெச்சரிக்கையாக அவை இருக்கிற இடத்தை விட்டு வெளியே வரவேயில்லை. சிங்கமும் நரியும் நடந்து நடந்து பார்க்கிறார்கள். சாப்பிடுவதற்கோ ஒரு மிருகமும் கிடைக்கவில்லை.

அந்தக் காட்டிலே ஒரு பெரிய யானை இருந்தது. அதனிடம் ஓடிப்போய் முயல் நிலைமையை எடுத்துக்கூறியது.

என்ன நடக்கிறது என்பதை அது நன்கு புரிந்து கொண்டது.எல்லாம் இந்த நரி செய்கிற வேலை என்பதும் அதற்குத் தெரிந்து விட்டது.

இரு... இரு... உனக்கு ஒரு வழி செய்கிறேன் என்று மனதில் நினைத்துக் கொண்டு அந்தச் சிங்கத்திடம் சென்றது.

" இப்படி சிறிது நேரம் தனியாக வா " என்று கேட்டது. சிங்கமும் அதனது அழைப்பை ஏற்று வந்தது.

யானை கேட்டது... "ஏன் இப்படி தனியாக அலைகிறீர்கள்... என்ன உனக்குப் பிரச்சினை? அதையேன் கேட்கிறீர்கள்... ஐந்து மிருகங்களைக் கொல்ல வேண்டும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது.இதை நரிதான் சொன்னது. அதுதான் பார்க்கிறோம். இன்றைக்கென்று பார்த்து ஒரு மிருகமும் கண்ணிலே படவேயில்லையே. அதுதான் கவலையாக இருக்கிறது என்றது.

கவலைப்படாதீர்கள்... நானும் ஒரு சாஸ்திரம் படித்திருக்கிறேன்... அதிலேயும் ஒரு வழி சொல்லப்பட்டிருக்கிறது.

"என்ன அது?"

"ஒரு நரியைக் கொல்வது ஐந்து மிருகங்களை கொல்வதற்கு சமன் என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

நல்ல நேரத்திலே நல்ல யோசனை சொல்லியிருக்கிறீர்கள். மிகவும் நன்றி என்று சொல்லிவிட்டு அந்தச் சிங்கம் நரி பக்கமாக திரும்ப ஆரம்பித்தது.

அதன்பின்பு அங்கே என்ன நாடகம் அரங்கேறி இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

இது குழந்தைகளுக்காக சொல்லப்படும் ஒரு கதை.

"கெடுவான் கேடு நினைப்பான்"... என்று நீதி விளக்கமும் கொடுப்பார்கள்.

இன்று உலகிலே பெரிய மனிதர்களிலேயும் இதுமாதிரி சிங்கம், நரி, யானை, முயல் எல்லோரையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம்

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் தமது சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் வேலை நிறுத்தப் போராட்டத்தில் அவர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன் வைத்தனர்.

அக்கோரிக்கைகள் வருமாறு,

✷ சம்பந்தப்பட்ட சுற்று நிருபம் 975 சகல தரங்களினதும் சம்பள முரண்பாட்டை மேலும் மோசமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளமை.

✷ இது சம்பந்தமான அனைத்து சுற்று நிருபங்களையும் ஆராயாமலும் ப.மா.ஆ.குழு உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்படாமலும் இது வெளியிடப்பட்டமை.

✷ ப.மா.ஆ.குழுவில் பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் நிர்வாக உத்தியோகத்தர்களில் இரு தரப்பினருக்கு மட்டும் நன்மையளிக்கும் வகையில் சம்பள அளவு மாற்றியமைக்கப்பட்டுள்ள காரணத்தால் சம்பள நிர்ணய ஆணைக்குழு, ப.மா.ஆ.குழு திறைசேரி, உயர் அமைச்சு ஆகியவற்றின் மீது தொழிற் சங்கங்கள் வைத்திருந்த நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது மற்றும் ப.மா.ஆ.குழு அதிகாரிகள் 11 இல் சம்பள அதிகரிப்பை பெற ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு 5 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

✷ தொழிற் சங்க கூட்டுக்குழுவால் 08.08.2011 இல் முன்வைக்கப்பட்ட சம்பள முறைமையினை கவனத்திற் கொள்ளாமல் சுற்றுநிருபம் 975 வெளியிப்பட்டுள்ளது.

✷சகலவகை போதனை சாரா ஊழியர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள சம்பள முரண்பாட்டை உடனடியாக நீக்கக் கோரியும் சம்பள முரண்பாட்டை சீர் செய்து நடைமுறைப்படுத்தும் வரை சுற்று நிருபம் 975 இனை நடைமுறைப்படுத்துவதனை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறும் அல்லது இரத்துச் செய்து விடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அடிப்படைச் சம்பளத்தின் 25 வீதத்தினை ஒரு கொடுப்பனவாக வழங்குமாறும் தொழிற் சங்க கூட்டுக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

இக்கோரிக்கைகளிற்கு இப்போராட்டத்தின் பின்னரும் சரியான பதில் கிடைக்காவிட்டால் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர். (அ-4)

# தொழிற் பயிற்சி கற்கை நெறி

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையினால் (NAITA) முள்ளியவளை தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழிற் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது என பயிற்சி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் ஜி.ரி.ரத்னகுமார் அறிவித்துள்ளார்.

இதில் கணனி உத்தரவாதப்பத்திரக் கற்கை நெறி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கை நெறி, மோட்டார் சைக்கிள் பொறியியல், டீசல் இயந்திர பொறியியல், படகு வெளி இணைப்பு இயந்திர பொறியியல், முச்சக்கரவண்டி பொறியியல், தன்னியக்க வாகன நிறம் தீட்டுநர், தன்னியக்க வாகன தகர வேலையாள், உருக்கிணைப்பாளர், தையல் பயிற்சி ஆகிய கற்கை நெறிகளே பயிற்றுவிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறியினை பின்பற்ற ஆர்வமுடையவர்கள் மாங்குளம் வீதி, முள்ளியவளையில் அமைந்துள்ள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். (அ-7)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60-65 | 60 | 90 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 80-90 | 90 | 140 |
| தக்காளி | 50-60 | 50 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 25-30 | 40 | 30 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 70 | 120 | 90 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 90 | 60 |
| வாழைக்காய் | 35-45 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 20-50 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 70 |
| பாகற்காய் | 100 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 60-70 | 90 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 70 |
| பயற்றங்காய் | 100 | 140 | 140 |
| லீக்ஸ் | 60 | 90 | 70 |
| பீற்றூட் | -- | 70 | 100 |
| கறிமிளகாய் | 180 | 140 | 170 |
| முருங்கைக்காய் | -- | 350 | -- |
| போஞ்சி | 40 | 40 | 90 |
| கத்தரிதம்புள்ள | 30-40 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 5-8 | 20 | 20 |
| தேசிக்காய் | 40-50 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 25 |

# இராசி பலன்

*27.01.2012*
*(தை 13,வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு*
*சதுர்த்தி பிற்பகல் 3.19 மணிவரை*
*பூரட்டாதி முன்னிரவு 8.18 மணிவரை*
*இராகுகாலம் 11.06-12.36 மணிவரை*
*சுபநேரம் 6.36-8.06 மணிவரை*
*சதுர்த்தி விரதம்.*

**மேடம்** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், சயன சுகக்குறைவான நாள்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும்,வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு,தொழிலில் முன்னேற்றம் காணப்படும்.

**மிதுனம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், அரசு வழி அனுகூலமுண்டு, தந்தை வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்புண்டு, பயணங்களால் பலன் உண்டு.

**சிங்கம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வரவு வருவதற்கு முன் செலவுகள் காத்திருக்கும், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி தேவை, போசன சுகமுண்டு.

**கன்னி** முருகன் வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள்,பெண்களின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், மாலை நேரப் பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் விலகும், பழைய கடன்களை பக்குவமாகப் பேசி சமாளிப்பீர்கள், சுவாரஸ்மான நாள்.

**விருச்சிகம்** பொதுவாழ்வில் புகழ் கூடும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.


**தனுசு** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர்.


**மகரம்** பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பலன் பெற வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், சகோதர வழி ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாகும்.

**கும்பம்** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், எதிர்பார்ப்புக்கள் எளிதில் நிறைவேறும், மனையில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், பணவரவு திருப்தி தரும்.

**மீனம்** தெய்வ வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்,ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள்,திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

வளவன்





மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மக்கள் வங்கியின் கலை வட்டத்தினால் கலாசார நிகழ்வு அண்மையில் யாழ். கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பிராந்திய மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் எஸ். பத்மநாதன் உரையாற்றுவதையும் கலாசார நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச்செய்தியாளர்)

## இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு இளைஞர் சம்மேளனம் க.பொ.த.(சா/தரம்)-2011 இல் தோற்றிய மாணவர்கள் உயர்தரத்தில் பாடநெறியை சிறப்பாக தெரிவு செய்வதற்காக யாழ்.மாவட்டத்தின் பிரபல முன்னணி ஆசிரியர்களூடாக இலவச பாடத் தெரிவு வழிகாட்டலுடன் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கான ஆலோசனைக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒருமணி வரை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இக்கருத்தரங்கில் விஞ்ஞானத்துறைக்கு ஆர்.குமரன், வணிகத்துறைக்கு எஸ்.வரதராஜன் கலைத்துறைக்கு என்.சத்திய வேந்தன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொள்வார்கள்

இதில் 2013 இல் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் பங்குபற்ற முடியும் எனவும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் அறிவித்துள்ளது. (அ)




## வலிகாமம் கல்விவலயத்தில் அதிபர் பதவி வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் மாணவர் அபிவிருத்திப் பிரிவுக்கான கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இப்பதவிக்கு விண்ணப்பிப்போர் வலிகாமம் வலயத்திற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் ஆகக் குறைந்தது மூன்று வருடகாலமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராகவும் இலங்கை அதிபர் சேவை 1 அல்லது இலங்கை அதிபர் சேவை 2-1 ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவை ஒன்றில் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து இப்பதவிக்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார். (அ-7)

## நீதிமன்றத்தால் அபராதம்

நல்லூர் மூத்த விநாயகர் கோவில் பகுதியில் நபர் ஒருவரை மோட்டார் சைக்கிளினால் மோதிக் காயப்படுத்தினார் என்ற குற்றஞ்சாட்டப்பட்ட நபரொருவர் யாழ். நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பகுதியில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவரினை மோட்டார் சைக்கிளால் மோதிக்காயப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற யாழ்.பொலிஸார் குறித்த நபரினை விசாரணைக்கு உட்படுத்தினர். இதன்போது குறிந்த நபரிடம் வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் ஆகியன இல்லாததைத் தொடர்ந்து யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மா. கணேசராசா குறித்த நபருக்கு 14 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-4)

## முறைசாரா கற்கைநெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் அலங்காரப்பொருள் உற்பத்தி மனைமுகாமைத்துவம் (உடையமைத்தல், ஐசிங்,தலை அலங்காரம், சமையற்கலை) ஆகிய முறைசாராக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டவுள்ளன.

இவற்றிற்கான விண்ணப்பபடிவங்களை கல்லூரி அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம் எனவும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதாலம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கல்லூரி அதிபர் திருமதி வே.பேரின்பநாதன் அறிவித்துள்ளார். (அ)

யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் பாடசாலை கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகளுக்கான இலவச பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளில் யாழ்வலய கணனி வள நிலையத்தினரால் கணனி பயிற்சியும் யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்தில் ஆங்கில மொழியும் யாழ். கனகரத்திம் மகா வித்தியாலயத்தில் சிங்களமொழிப் பயிற்சி நெறியும் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி நெறியினைப் பயில விரும்புவோர் சுய விபரக் கோவையினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த நிலையங்களில் பதிவு செய்யுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ராஜலிங்கம் அறிவித்துள்ளார். (அ-7)

## 85 மில்லியன் ரூபா செலவில் நவீன கடைத்தொகுதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையினால் சாவகச்சேரி நவீன சந்தையின் மேற்புறத்தில் பேருந்து நிலையத்திற்கு முன்பாக சுமார் 85 மில்லியன் ரூபா செலவில் நவீன கடைத் தொகுதி புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான வரைபடமும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற சாவகச்சேரி நகர சபைக் கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கான கட்டட வேலைகள் எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஆரம்பிக்கப்படும் எனவும் சுமார் 25 கடைகளை கொண்ட இரு கடைத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளதென சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் இ.தேவசகாயம் தெரிவித்துள்ளார். (அ-3-29)

## தற்செயல் நிவாரணத்திற்கு பயனாளிகள் தெரிவாகினர்

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஊடாக தற்செயல் நிவாரணத்திற்கென விண்ணப்பித்தவர்களில் 9 பயனாளிகளுக்கான முதலாம் கட்ட கொடுப்பனவுக்காக 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்க மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் அனுமதி கிடைக்கப்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

இதில் மாணிக்கம் செல்வராசா- வெள்ளாம் போக்கட்டி, வெள்ளையன் மகேஸ்வரன்- கரம்பை குறிச்சி மேற்கு, உதயகுமார் உதய சீலன்- கரம்பை குறிச்சி மேற்கு, வேலுப்பிள்ளை நாகம்மா- கரம்பைக் குறிச்சி மேற்கு, சின்னத்துரை பரிமளா- கரம்பைக்குறிச்சி மேற்கு, ஜெயக்குமார் சாந்தி- உதயநகர், கைதடி, தர்மகுலசிங்கம் புஸ்பமலர்- மட்டுவில் கிழக்கு, சின்னத்தம்பி கணேஸ்வரன்- மீசாலை கிழக்கு, சங்கர் வினுஜா- கச்சாய் தெற்கு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பயனாளிகளை தமது ஆள் அடையாள அட்டை, குடும்ப அடையாள அட்டை ஆகியவற்றுடன் இன்று வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு சமுகமளிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(அ-3-29)

## சிறுவர் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான திட்டங்கள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் உரிமை பாதுகாப்பது தொடர்பில் அறிக்கையிடுதலும் பதிவளித்தலும் சமூகத்தின் நம்பிக்கையினை கட்டியெழுப்புதல் தொடர்பிலும் திட்டங்கள் சிலவற்றை நடைமுறைப்படுத்தி வருவதாக யாழ். மனிதவுரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகிய மாணவர்களை எவ்வாறு மீள இணைத்துக் கொள்ளல், சிறுவர் கௌரவம் எவ்வாறு பேணப்படல், சிறுவர்களை வேலைக்கமர்த்தலினை எவ்வாறு தவிர்த்துக் கொள்ளல் போன்ற சிறுவர் உரிமைகளை பாதுகாப்பது எவ்வாறு என அரச அதிகாரிகளிற்கும் பிரதேசங்களிற்கும் மேற்கூறப்பட்ட எண்ணக்கருவிலான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டம் யாழ், கிளிநொச்சியிலுள்ள சகல பிரதேசங்கள் தோறும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தற்போது கோப்பாய் பிரதேச செயலகத்தில் இத்திட்டம் வெற்றிகண்டுள்ளது. மேலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசங்களிலும் செய்து வருகின்றதோடு அடுத்த கிழமை கரைச்சி பிரதேச செயலகத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் சிறுவர் நலன் தொடர்பான விளக்கமளிக்கப்படுவதனால் அப்பிரதேசத்திலுள்ள சிறுவர்களின் உரிமை, நலன்களை பாதுகாத்து அவர்களை உடல், உள ரீதியாக முன்னேற்றமடையச் செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் 12 மணிநேர வெளிநோயாளர் சேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பகல் முழுநேர வெளிநோயாளர் பிரிவு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை வெளிநோயாளர் பிரிவு திறக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றது. கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அடுத்தாக 12 மணி நேர தொடர் வெளிநோயாளர் பிரிவு சாவகச்சேரி ஆதார வைத்திசாலையிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி கிழக்கு, பூநகரி, கிளிநொச்சி, பளை போன்ற தூர இடங்களில் இருந்து வரும் நோயாளர்களின் நன்மைகருதி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் வழிகாட்டலில் மேற்படி வெளிநோயாளர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவரின் வழிகாட்டலில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பல்வேறு கிளினிக்குள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# மட்டக்களப்பு சிறைச்சாலை நவீன மயப்படுத்தப்படும்

## பிரதியமைச்சர் முரளிதரன்

மட்டக்களப்பு சிறைச்சாலையை புதிய நவீனமயமான சிறைச்சாலையாக அமைத்து புனர்வாழ்வு மையமாக இயங்குவதற்கு சிறைச்சாலைகள் அமைச்சரிடம் விடுத்த கோரிக்கைக்கு அனுமதி கிடைத்துள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.மட்டக்களப்பு, கிரான் பிரதேசத்தில் மக்கள் வங்கியின் 964 ஆவது உப கிளையை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு சிறைச்சாலை மிகவும் நெருக்கடியான ஒரு இடத்தில் இருக்கிறது. சிறையில் வாழும் கைதிகள் கூட மிகவும் சிரமத்தின் மத்தியில் உள்ளார்கள்.இதனடிப்படையில் சிறைச்சாலைக் கட்டடத்தை நவீன முறையில் அமைத்துக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என குறிப்பிட்டுள்ளார்.

இவ்வளவு காலமும் நாங்கள் அறுவடை செய்கின்ற நெல், எமது உழைப்பால் வருகின்ற பயன்பாடுகள் என்பவற்றை சேமிப்பதற்கு வசதியற்ற நிலை இருந்தது.ஆனால் இன்று இதுபோன்ற வங்கிகள் உங்கள் காலடியில் இருக்கின்ற போது நீங்கள் சேமிப்பதற்கான வாய்ப்பு பெற்றுத் தரப்பட்டிருக்கின்றது.முதற்தரமான இரண்டு வங்கிகளை உள்ளடக்கியதாக எங்கள் கிராமம் இன்று மாற்றமடைந்திருக்கின்றது.

இதனைத்தவிர ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் கிரானையும் சந்திவெளியையும் இணைத்து பூரண கட்டடத்தொகுதி, கணனிக் கூடங்கள் மற்றும் விஞ்ஞான ஆய்வு கூடங்களை உள்ளடக்கிய நவீனமயமானதாக இவ்விரு பாடசாலைகளும் புனரமைக்கப்படவிருக்கின்றன. இவ்வருட இறுதிக்குள் அதன் பயன்பாட்டை நீங்கள் காண்பீர்கள் எனவும் அவர் தெரிவித்தார். (அ-14)

## பரிசளிப்பு விழா

வர்த்தக வங்கியின் சுன்னாகக்கிளையினால் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலு சிறுவர் கணக்கினைப் பேணும் தேர்வு செய்யப்பட்ட பாடசாலைகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகக் கிளையின் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக சுன்னாகக்கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ-7)

# சமூக நல்லிணக்க அமைச்சின் வாழ்வாதார செயற்றிட்டம்

யுத்தத்தால் குடும்பத் தலைவர்களை இழந்த பெண்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் விசேட செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்த தேசியமொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு,தெற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் கணவனை இழந்த 15 ஆயிரம் பெண்கள் தற்போது இருப்பதாகத் தெரிவித்த அமைச்சு அவர்களுக்காக இதுவரை முறையான திட்டமெதுவும் அமுல்படுத்தப்படவில்லை எனவும் அதற்காக நிதி மற்றும் வங்கிக் கடன்களை பெற்றுக்கொடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் குறித்த திட்டத்துக்கான தெரிவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது.அதற்காக பிரதேச செயலகங்கள் மற்றும் செயலாளர் அலுவலங்களில் கடமையாற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஊக்குவிப்பு அதிகாரிகளை பயன்படுத்தவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

யுத்தத்தால் கணவனை இழந்த பெண்கள் தமது தகவல்களை அமைச்சுக்கு தெரிவிக்க முடியும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.(அ-14)

# தவறுகளைச் சுட்டிக் காட்டுங்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்காதீர்!

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைக்காட்டிக் கொடுப்போருக்கு நாட்டு மக்கள் உரிய பாடம் புகட்டுவார்கள் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஊடக அடக்குமுறை இடம்பெறுவதாகக் குறிப்பிட்டு நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறுகையில், இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இந்த ஆர்ப்பாட்டமும் ஜனநாயகத்தின் வெளிப்பாடே.

என்றாலும் நாட்டை காட்டிக் கொடுப்பவர்கள் அன்று போல் இன்றும் இருக்கிறார்கள். ஆனால் நாட்டை காட்டிக்கொடுக்கும் தேசத்து துரோகிகளுக்கு மக்கள் காலத்திற்கு காலம் நல்ல பாடம் புகட்டி வருகின்றார்கள். இது வரலாறாகும்.

நாட்டை காட்டி கொடுக்கும் செயலில் ஈடுபட முயற்சிப்பவர்கள் முதலில் நாட்டைக் குறித்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவ்வாறான செயலில் ஈடுபடுபவர்கள் இலங்கையில் மாத்திரமில்லை. உலகின் எல்லா நாடுகளிலுமே இருக்கிறார்கள்.

நாட்டு மக்கள் மஹிந்த சிந்தனைக்கே ஆணை வழங்கியுள்ளார்கள். ஆகவே அந்த ஆணையை மதித்துச் செயற்படவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. இதைவிடுத்து மக்கள் ஆணை வழங்காதவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப எம்மால் செயற்பட முடியாது.

தவறுகள், குறைபாடுகள் இருந்தால் அவற்றைச் சுட்டிக்காட்டுங்கள்.திருத்தி கொள்ள நடவடிக்கை எடுப்போம்.இதை விடுத்து நாட்டைக் காட்டிக் கொடுக்காதீர்கள் என்றார்.(அ)

# மரண அறிவித்தல்

## தேவசகாயம் மகேஸ்வரி



கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் -மகேஸ்வரி 25.01.2012 புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் -பவளம் தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தேவசகாயத்தின் மனைவியும் ஆவார். சாந்தினி, நந்தினி, நடனகுமார், பிரேம்குமார், நந்தகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும், சிவராஜா, தர்மதேவா, கோசலா, ரிஷாந்தினி ,கிருஷாந்தி ஆகியோரின் அன்பு மாமியும், மகாதேவா, இரத்தினசபாபதி, பாக்கியநாதன், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, அசோக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, கனகலிங்கம்,பரமேஸ்வரி மற்றும் சத்தியசீலன், மகேஸ்வரன், சகுந்தலாதேவி, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், நிரோஜன் ,அர்ஜுன், தக்ஷன், சர்மிலா, மதுரா, ஆதீனன், ஆதீனா, சங்கமேந்தி, சிவசங்கரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்:-**
**தே.ஜெயக்குமார்**
**(ஆசிரியர்-மகன்).**

**மணியர்பதி வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

(சி-5679)



இந்தியாவின் 63 ஆவது குடியரசு தினம் நேற்று பலாலி வீதியில் உள்ள யாழ். இந்தியத்துணைத்தூதரகத்திலும் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். இந்தியத்துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் இந்தியதேசிய கொடியை ஏற்றிய பின் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இணையுமாறு அரசிடமிருந்து இதுவரை அழைப்பு வரவில்லை

## த. தே. கூ. தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைந்து கொள்ளுமாறு தமக்கு உத்தியோகபூர்வமாக அரசாங்கத்திடமிருந்து அழைப்பு வரவும் இல்லை அறிவிக்கவும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டாலோ அல்லது அறிவிக்கப்பட்டாலோ ஏற்கனவே கூறியதன் பிரகாரம் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணக்கப்பாட்டுக்கு வந்தால் மாத்திரமே தெரிவுக் குழுவில் இணைந்து செயற்படுவது குறித்து முடிவெடுக்கலாம் என்றும் கூட்டமைப்பு கூறியுள்ளது.

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கு கொள்ள வேண்டுமென அரசு வலியுறுத்தியுள்ளமை தொடர்பில் கேட்டபோதே கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையிலான பேச்சுக்கள் ஒரு வருடத்தை கடந்து விட்டன. ஆனால், பலன் கிடைத்ததாக இல்லை. இவ்வாறான நிலையில்தான் தெரிவுக்குழு குறித்து அரசு பேசுகின்றது.

தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கு கொள்ள வேண்டும் என இதுவரையில் அரசாங்கம் எமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. அழைப்பு விடுக்கவும் இல்லை.

நாம் எமது தரப்பு நிலைப்பாடுகளை மிகவும் தெளிவாகவே பேச்சுவார்த்தைக் குழுவிடமும் ஜனாதிபதியிடமும் தெரிவித்துவிட்டோம். இதுவரையிலான பேச்சுவார்த்தை தொடர்பில் அரசாங்கம் கூட்டமைப்புடன் இணக்கப்பாடொன்றுக்கு வரவேண்டும் என்பதைக் கூறியிருக்கின்றோம். எனினும் எமது நியாயப்பாடுகள் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுவதாக தெரியவில்லை.

எவ்வாறிருப்பினும் தெரிவுக் குழுவில் இணைந்து கொள்ளுமாறு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டாலும் கூட எமது கோரிக்கைகளின் பிரகாரம் அரசு இணைக்கப்பாடொன்றுக்கு வரவேண்டும். அவ்வாறு வந்தால் மாத்திரமே தெரிவுக் குழுவில் இணைவது தெடர்பில் முடிவெடுக்க முடியும் என சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார். (அ-2)

# கிழக்கை ஆக்கிரமிக்கும் இந்திய மீனவர்கள்

## கடற்படை குற்றச்சாட்டு

(திருகோணமலை)

இந்திய மீனவர்கள் இலங்கையின் கிழக்கு பகுதியையும் ஆக்கிரமித்து வருவதாக கடற்படையினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்கில் இவ்வாறு இந்திய மீனவர்கள் சட்டவிரோதமான முறையில் கிழக்குப் பகுதியை வந்தடைவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் இம் மீனவர்கள் நடுக் கடலில் மீன் பிடிக்கும் போது இலங்கை கடற்படையினர் கைது செய்து திருகோணமலை பொலிஸாரிம் ஒப்படைத்தனர் என இந்திய தகவல்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# பொன்சேகாவின் வழக்குத் தொடர்பில் விபரங்களை கொடுக்காத சட்டமா அதிபர்

(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான வழக்குகளை அவதானித்து வந்த அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் பிரதிநிதியான மார்க் றொவெல் சட்டமா அதிபர் பல தடவை பேசிய போதும் தான் கேட்ட விடயங்களை தனக்கு தரவில்லை என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் பிரதிநிதியாக சரத்பொன்சேகா மீதான வழக்கை அவதானிக்கவென அனுப்பி வைக்கப்பட்ட றொவெல் அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்.

இவர் ஜூன் 6, 2011 இலிருந்து ஜூன் 11, 2011 வரை இலங்கையில் தங்கியிருந்தார். பொன்சேகாவின் வழக்குரைஞர்கள் தேவையான சகலதையும் தந்ததாக அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறையில்-பொன்சேகாவின் நிலை பற்றி குறிப்பிடும் போது ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது நிலைமை திருப்தியாகவே உள்ளது. ஆனால், உண்டான முன்னேற்றம் ஒவ்வொன்றும் நீதிமன்றத்தின் கட்டளையின் பேரிலேயே உண்டானது என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. றொவெலின் அறிக்கை பற்றி அச்சமயத்தில் சட்டமா அதிபராக கடமையாற்றிய மொஹான்பீரிஸ் கருத்துக்கூற மறுத்து விட்டார். (அ-2)

# இடைநிலை பாடசாலைகளில் மூவாயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளில் மூவாயிரம் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் கடந்த வருடம் நடைபெற்ற போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி தகைமை பெற்றவர்களை நேர்முகப் பரீட்சையினூடாக தெரிவு செய்யும் பொருட்டு அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருவதாகக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளில் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கற்பிப்பதற்கான பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஆங்கில பாடத்துக்கு ஆயிரம் ஆசிரியர்களும் தகவல் தொழில்நுட்பப் பாடத்துக்கு ஆயிரம் ஆசிரியர்களும் கணித பாடத்துக்கு 500 ஆசிரியர்களும் மற்றும் விஞ்ஞான பாடத்துக்கு 500 ஆசிரியர்களுமாக 3 ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு தெரிவு செய்யும் முகமாக நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறுவதாக அவர் தெரிவித்தார்.

கணித பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை மகரகம தேசிய கல்வி நிறுவகத்திலும் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் ஆங்கில பட்டதாரி ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை பேராதனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் நடைபெறுவதுடன் தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் கல்வியமைச்சில் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ-2)


union assurance
Trust in your tomorrow, today.

**வேலை வாய்ப்பு**

உயர்தர பரீட்சைக்கு பெறுபேறுகள்
வெளியான தருணத்தில்!!!
வேலைவாய்ப்பை எதிர்பார்த்து நிற்கும்
இளைஞர், யுவதிகளுக்கு!!!

- திறமைக்கு முதலிடம்
- உழைப்பிற்கேற்ற ஊதியம்
- வளமான எதிர்காலம்
- வசதியான வாழ்க்கை

யாவற்றையும் ஒரே இடத்தில்
அமைத்துக்கொள்ள அரியதோர் சந்தர்ப்பம்




பதவி வெற்றிடங்களைப் பெற்றுக்கொள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் நடாத்தும் மாபெரும் வேலைவாய்ப்பிற்கான நேர்முகத்தேர்விற்கு தங்களை வரவேற்கின்றோம்.

**பதவி வெற்றிடங்கள்**

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி-5
பதவி-4 ← தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி-3
பதவி-1
பதவி-2 ← தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
↓
காப்புறுதி ஆலோசகர்

அடிப்படை தகைமைகள்
- க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்
- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்
- திடசித்தம்

*யூனியன் அஷ்யூரன்ஸ்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்*

குறிப்பு:- ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத்தேர்வுக்கு சுயவிபர கோவையுடன்

காலம்:- திங்கட்கிழமை-30.01.2012
நேரம்:- மு.ப. 9.30 மணி
இடம்:- யூனியன்ஸ் அஷ்யூரன்ஸ்
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:-
T.மாவேந்தன்:- 0773664160
F.x.மயூரன் :- 0773713415

(சீ-5653)

# கப்பற்றொழில் வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வு

**Electro- technical Officer** நவீன கப்பல்களில் electronic equipment கள் அதிகமான பாவனையில் உள்ளன. Engin room control system, electronic safety system, satellite navigation, communication controls, remote controls, radar, gyro compass என பல electronic கருவிகள் பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் computer hardware, soft ware போன்றவற்றிற்கு பொறுப்பானவர் ஆவார்.

**Deck ratings:-** deck இல் chief officer இன் பணிப்பில் வேலை செய்யும் சாதாரண மாலுமிகள்.


**Engine room ratings:-** engine room இல் chief engineer இன் பணிப்பின் கீழ் வேலை செய்யும் சாதாரண மாலுமிகள்.

**Hospitality ratings:-** cook மற்றும் stewards ஆக வேலை செய்பவர்கள். இவர்கள் chief steward இன் கீழ் வேலை செய்பவர்கள்.

**Merchant navy officer ஆக வருவதற்குத் தேவையான படிப்பு மற்றும் தராதரங்கள்**

18 (சில நாடுகளின் 16) வயதிற்கு மேற்பட்ட ஆண் அல்லது பெண்கள் எவரும் கப்பலில் சேர்ந்து merchant navy officer ஆக வர முடியும். GCE (O/L) இல் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட 5 திறமைச் சித்தி எய்தியோர்கள் cadet ஆக சேர முடியும். இச்சித்தி அல்லாதோர். deck அல்லது engine room rating ஆகச் சேர்ந்து 3 தொடக்கம் 4 ஆண்டு அனுபவம் பெற்றவுடன் officer படிப்பிற்காக college இல் சேர்ந்து examination எடுத்து officer certificate பெறமுடியும்.

Merchant navy officer ஆக வர முன்னர் விசேடமான medical test இற்கு உட்படுத்தப்படுவர். முக்கியமாக பார்வை, நிறக்குருடு போன்ற குறை இல்லாமல் பொதுவான நல்ல தேக சுகாதாரம் உள்ளவர்கள்



medical test இல் தேர்வடைவர். Merchant navy rating கப்பலில் சேரமுன்னரும் அதன் பின்னர் இரு வருடங்களுக்கு ஒருமுறை medical test இற்கு உட்படுத்தப் படுவர்.

***கப்பற்றொழில் பற்றி வழக்கமாக எழும் வினாக்களும் அவற்றின் விடைகளும்***

**Shipping agents பணம் வாங்கியே கப்பலில் ஏற்றுகிறார்களே?**

Agent பல ship owner களுடன் தொடர்பு கொள்கிறார். வேறும் பல செயல்களை உங்களுக்காக செய்கிறார். நீங்கள் கொழும்பில் நிற்கும் செலவு, சிரமம் என்பன இதனால் குறைக்கின்றன. கப்பலில் ஏறுமுன்னர் உங்களுக்கு அறிவித்து ஒரு சிரமமும் இல்லாது நேரடியாக கப்பலுக்கு அனுப்புகின்றார்கள். எனவே, agent இற்கு பணம் கொடுத்து கப்பலில் சேர்வதைத் தவிர்க்க இயலாது. ஆங்கிலம் சரளமாக கதைப்பவர்கள் பலர் கம்பனிகளுடன் நேடியாகத் தொடர்பு கொண்டு seaman வேலைவாய்ப்பு பெற வசதிகள் உள்ளன. மற்றும் அடிப்படை கல்வித் தராதரம் உள்ளவர்கள் நேரடியாக cadet ஆக சேர வாய்ப்புக்கள் உள்ளன. ஒருமுறை கப்பலுக்குச் சென்று கம்பனி உடன் தொடர்பு வைத்திருப்பவர்களும் certificate உடைய தரமான officer களும் தொடர்ந்து கம்பனி களில் வேலைவாய்ப்பு கிடைக்க வசதியிருப்பதனால் agent மூலமாகச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

**Agent இற்கு பணம் கொடுத்து கப்பலில் சேர்ந்தவர்கள் கப்பல் விற்றாகிவிட்டது என்று மூன்று மாதத் திலேயே இறங்கி வந்துள்ளார்களே?**

கப்பலில் சேரும் போது ships article மற்றும் ஒப்பந்தங்களில் இல் கையெழுத்து இடும் போது சரியாக வாசித்து கையெழுத்திட்டால் இடையில் இறங்க வேண்டி வந்தால் கூட அதற்குரிய நஷ்டஈடு (insurance) அல்லது redundancy payment பெறுவதற்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

**எம்மவர்கள் பலர் Certificate இல்லாது கப்பலில் வேலை செய்கிறார்களே?**

Ratings ஆக வேலை செய்வதற்கு அடிப்படைப் பயிற்சியும் (basic training) CDC யும் போதுமானது. certificate தேவை இல்லை. பல உள்ளூர் கம்பனிகள் உதாரணமாக தங்கள் கம்பனிகளில் வேலை செய்யும் நம்பிக்கையான அனுபவசாலிகளுக்கு Panama, Liberia போன்ற certificate களை

ந.சிவரத்தினம்
சர்வதேச இணைப்பாளர்
வல்வை. மாலுமிகள் நலன்புரிச் சங்கம்.

பணத்திற்கு வாங்கிக் கொடுத்து officer வேலை கொடுக்கின்றார்கள். இத்தகைய certificate களுடன் வெளிநாடு செல்லும் பெரிய கப்பல்களில் கடமையாற்ற முடியாது. சம்பளமும் குறைவாக இருக்கலாம்.

College படித்து certificate எடுத்தால் உலகத்தில் எல்லா நாட்டுக்கும் சென்றுவரக் கூடிய எந்தவிதமான பெரிய கப்பலிலும் நிறைந்த சம்பளத்துடன் வேலை செய்ய முடியும். (தொடரும்)

# பொருளாதாரத்தை மேம்படுத்த பரவலாக்கப்பட்ட வேலைத்திட்டம்

## திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர தெரிவிப்பு

(கொழும்பு)

சாதாரண குடும்பம் முதல் வெளிநாட்டு முதலீடுகள் வரையிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் பரவலாக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதில் வீட்டுத்தோட்ட வேலைத்திட்டம் பிரதானமாக அமைந்துள்ளது என்று நிதியமைச்சின் செயலாளரும் திறைசேரியின் செயலாளருமான கலாநிதி பி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்."

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தை தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் அடிப்படையிலேயே பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் வீட்டுத்தோட்ட வேலைத்திட்டம் முக்கியமானதாக அமைந்துள்ளது.

மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாகவே வீட்டுத்தோட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கென இவ்வருடத்திற்கு 91 ஆயிரத்து 475 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கென பரவலாக்கப்பட்ட வேலைத்திட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன.

10 மில்லியன் வீடுகளை இலக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்தோட்ட வேலைத்திட்டம் இம்முறை 2.5 மில்லியன் வீடுகளை இலக்காக கொண்டு மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலமாக மந்தபோசனம் குறைக்கப்பட்டுள்ளதுடன் மாதமொன்றுக்கு 3 ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரையிலும் வீட்டுத் தோட்டத்தினால் மீதப்படுத்த முடியும்.

வீட்டுத் தோட்ட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமையினால் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது.

உணவு பற்றாக்குறை 2 வீதத்தினால் குறைந்துள்ளது. அத்துடன் உணவுப் பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளன. அத்துடன் தொற்று அல்லாத நோய்களை தீர்ப்பதற்கான நடவடிக்கையாகவும் இது அமைந்துள்ளது.

விவசாயத்தில் ஏற்றுமதி நாடாக மாற்றுவதே இந்த வேலைத்திட்டத்தின் பிரதான இலக்காகும். உணவுப்பொருட்கள் 2ஆயிரத்து 160 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அவற்றை குறைக்க வேண்டும்.

வீடு தங்குமிடமாக மட்டுமே பயன்படுத்தப்படுமாயின் வறுமையை ஒழிக்க முடியாது. வீட்டுத்தோட்டத்தின் மூலம் வறுமையை ஓரளவிற்கு ஒழிக்க முடியும். (அ-2)

# இந்தியப் பிரஜை கைது

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து கல்முனை பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை பொலிஸ் நிலைய அதிகாரிகளால் இவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாடு-விருதுநகர்-தலவாய்புரம் பகுதியைச் சேர்ந்த இந்திய பிரஜையே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# திருநாள் திருப்பலி


ஓட்டுமடம் புனித செபஸ்ரியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருச்செப மாலையும் திருப்பலியும் நாவாந்துறை பங்குத்தந்தை அருட்பணி பா.பி. இராஜசிங்கம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையும் தொடர்ந்து திருப்பலி நற்கருணை வழிபாடும் நற்கருணை பவனியும் இடம்பெற்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி திருச்சொரூப பவனியும் திருச்சொரூப ஆசீர்வாதமும் நடைபெற்றது. (அ-7)

# 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி மேல்சபை ஒன்றையும் உருவாக்குவேன்

## அமெரிக்காவுக்கு கூறினாராம் ஜனாதிபதி

### விக்கிலீக்ஸ் தகவல்





(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அமெரிக்காவின் செனட் சபையைப் போன்று மேல்சபை ஒன்றையும் உருவாக்குவதே தனது தீர்வுத்திட்டம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமெரிக்காவுக்கு வாக்குறுதி வழங்கியதாக கொழும் பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வோஷிங்டனுக்கு அனுப்பிய தகவல் பரிமாற்றக் குறிப்பிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.**

அத்தகவலில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்ட அன்று கடந்த 2009 மே மாதம் 20 ஆம் திகதி அமெரிக்கத் தூதுவராக இருந்த றொபேட் ஓ பிளேக் இலங்கை ஜனாதிபதியிடம் பிரியாவிடை பெறுவதற்காக சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அன்றைய தினம் அமரிக்கத் தூதரக அதிகாரி ஜேம்ஸ் மூர் வோஷிங்டனுக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது றொபேட் ஓ பிளேக் இரண்டு முக்கியமான விடயங்களில் நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

மனிதாபிமான ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இந்த நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தமிழர்கள் கௌரவமாகவும் நம்பிக்கையுடன் வாழ்வதற்கு அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்றும் வலியுத்தியுள்ளார்.

அப்போது இலங்கை ஜனாதிபதி தான் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அதிகாரங்களைப் பகிரவுள்ளதாகவும் இதன்படி 13 ஆவது திருத்தத்தில் மாகாணங்களுக்கு உள்ள அதிகாரங்களுடன் மேலதிகமாக அமெரிக்காவில் உள்ளது போன்ற செனட் சபையை உருவாக்கப் போவதாகவும் வாக்குறுதி கொடுத்துள்ளார்.

எவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரச்சினையாக இருப்பதாகவும் அவர்கள் கோருவது போன்று பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மோசமான குற்றங்களில் ஈடுபட்டோருக்கு தண்டனைகளை வழங்குவதை உறுதி செய்வதாகவும் அவர் மேலும் கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

(அ-2)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களும் நிரந்தர அரச உத்தியோகத்தர்களே!

## பிரதியமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் அரசாங்க ஓய்வூதியம் பெறும் நிரந்தர உத்தியோகத்தர்களாக மாற்றப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் திவிநெகும எனும் திணைக்களத்தின் கீழ் உள்வாங்கப்படவுள்ளனர். அதன் மூலம் இந்த நாட்டிலுள்ள அனைத்து சமுர்த்தி உத்தியோகத்தர்களும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்களாக மாற்றப்படவுள்ளனர். இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் பெறவுள்ளோம்.

நிரந்தர ஓய்வூதியம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மாற்றப்பட்டு அவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் பெறும் அத்தனை சலுகைகளும் வழங்கப்படும்.

திவிநெகும திட்டத்தினூடாக வறிய மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பாடுபட வேண்டும். அதற்காக திறம்பட உழைக்க வேண்டும். இத்திட்டத்தினை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வழங்க வேண்டும்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்களாக மாறும்போது மூன்று வழிவகைகளை பின்பற்ற முடியும். இவ்வளவு காலமும் சமுர்த்தி உத்தியோகத்தர்களாக செலுத்தி வந்த 12 % ஊழியர் சேமலாப நிதியினை (ஈ.பி.எப்) பெற்றுக் கொள்ள முடியும்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வழங்கிய 12 வீத ஊழியர் சேமலாப நிதியினை பெறாமல் விட்டால் அவர்கள் ஆரம்பம் முதல் அவர்களின் சேவை கணக்கிடப்பட்டு நிரந்தர ஓய்வூதியத்துக்கு உடனடி தகுதி பெறுகின்றனர்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து நீங்கிக் கொள்ள விரும்பினால் அவர்களுக்கு இரண்டு வருட சம்பளத்துடன் ஊழியர் சேமலாப நிதியும் வழங்கப்படும்.

இவற்றில் ஏதாவது ஒன்றை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பின்பற்ற முடியும். ஆனால், எந்தவொரு சமுர்த்தி உத்தியோகத்தரும் பணத்தைப் பெற்றுக் கொண்டு சேவையிலிருந்து விடுபடக்கூடாது என்பதே எனது தனிப்பட்ட ஆலோசனையாகும்.

தற்போது சமுர்த்தி உத்தியோத்தர்களாக இருப்பவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களாக மாற்றப்பட்டால் அனைவருக்குமே இதன் மூலம் சிறந்த எதிர்காலமுண்டு.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நிரந்தரமாகக்கப்பட்டவுடன் அவர்களுக்கான வீட்டுக்கடன் வசதிகள் உட்பட அனைத்து வசதிகளும் வழங்கப்படும்.

இவ்வளவு காலமும் வழங்கப்படாமலிருந்த அனைத்து பதவியுயர்வுகளும் நிரந்தரமாக்கப்பட்டவுடன் வழங்கப்படும். தற்போது சமுர்த்தி உத்தியோத்தர்களின் அடிப்படை சம்பளத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு இம்மாத சம்பளத்துடன் வழங்க நடவடிக்கை எடுப்பேன் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

(அ-2)



பலஸ்தீன், காஸா பிரதேசத்தில் இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தின் மூன்று ஆண்டு நிறைவை முன்னிட்டு புகைப்பட கண்காட்சியும் வீடியோ பட காட்சிப்படுத்தல் நிகழ்வும் கொழும்பில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிழ்வில் காஸா யுத்தத்தில் பாதிக்கப்பட்டவரான கலாநிதி இஸ்ஸல்டின் அபுலேஸ் காட்சிகளை சுூலம்பிப்பதை படத்தில் காணலாம்.

# மாணிக்கக்கல் அகழ்வு; ஐந்து பேர் கைதாகினர்

(மாவனெல்ல)

மாவனெல்ல பிரதேச வர்த்தகர் ஒருவரிடமிருந்து சுமார் நான்கு கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக்கற்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஐந்து சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

குறித்த வர்த்தகரின் வீட்டில் வர்த்தக நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது பொலிஸ் அதிகாரிகள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சந்தேகநபர்கள் மாணிக்கக்கற்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மாவனெல்ல பொலிஸார் ஐந்து சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

அவர்களுக்குச் சொந்தமான இரண்டு முச்சக்கரவண்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ-2)

# புலிகளின் கொள்கைகளை முன்னெடுக்க முடியாது

## அமைச்சர் ரட்ணசிறி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு எந்தவித அதிகாரங்களும் இல்லை.

இவ்வாறு நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரம நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஹொரணயில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதனிடையே 13 ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலும் அமைச்சர் ரட்ணசிறி விக்ரம நாயக கருத்துரைத்தார்.

(அ-2)


# கண்ணீர் அஞ்சலி

**நடராசா காசிவேந்தன் (B.Com, M.A)**

**(முகாமைத்துவப் பணிப்பாளர், சமுர்த்தி மகாசங்கம், உடுவில்)**



**நடராசா காசிவேந்தன் (B.Com, M.A)**

*(முகாமைத்துவப் பணிப்பாளர், சமுர்த்தி மகாசங்கம், உடுவில்)*

அவர்களின் திடீர் மறைவால் ஆழ்ந்த துயரமடைகின்றோம்.

அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி முகாமையாளர்களும்,
சமுர்த்தி உத்தியோகத்தர்களும்,
பிரதேச செயலகம், தெல்லிப்பளை. (7372)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 22




பிரான்சின் வீழ்ச்சியை அடுத்து ஜேர்மன்நாஜிகளின் கொடி பாரிசில்பறக்கவிடப்பட்டுள்ளது

பிரெஞ்சுப்போர் வீரர்கள், தமது தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்காக வீரத்தோடு போரிட்டனர். ஆனால், உயர்மட்டத்தின் துரோகங்களும், படைத் தலைமையின் செயலின்மையும், ஆயுதங்கள் மற்றும் போர்த் தளவாடங்கள் இல்லாமையும் போரின் போக்கைப் பாதித்தன. ஜேர்மனியத் துருப்புக்கள் மீண்டும் போர்முனையைப் பிளந்து கொண்டு மேற்கு நோக்கிப் பாய்ந்து சென்றன.

பிரான்சின் சுதந்திரத்தை எதிர் நோக்கியிருந்த அபாயமானது எல்லா தேசபக்த சக்திகளின், மக்கள் அனைவரின் ஒற்றுமையை, ஒருங்கிணைப்பைக் கோரியது. ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராக பொதுமக்கள் எதிர்ப்பைக் காட்டுமாறும் பாரிஸ் நகரின் தற்காப்பிற்கு ஏற்பாடு செய்யுமாறும் பிரெஞ்சுக் கம்யுனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுத்தது. ஆனால், சரணடைவாளர்களும் பிரெஞ்சு மக்களின் துரோகிகளும்- ரெய்னோ, பெட்

## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்



பிரான்சின் ஜெனரல் ஹன்ற்சிங்கர் ஜேர்மனியரிடம் சரணடைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார்

டேன், லவாஸ் போன்ற அரசியல் பிரமுகர்களும் ஜெனரல் காமெலேனை மாற்றிய தலைமை படைத் தளபதி வைகான் தலைமையில் மற்றவர்களும் பாட்டாளி வர்க்கம் புரட்சிப் போராட்டத்தைத் தொடங்கும் என்றும் பிரெஞ்சு மக்களின் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு அதிகரிக்கும் என்றும் அஞ்சி, இவை அனைத்தையும் மறுத்தனர். பிரெஞ்சு அரசாங்கம் பாரிசை விட்டு வெளியேறி தூருக்கு ஓடிப் போயிற்று, இராணுவமோ எதிர்ப்பைக் காட்டுவதற்கான தனது


வாய்ப்புக்கள் அனைத்தையும் பயன் படுத்தாமலேயே ஆயுதங்களைக் கீழே போட்டது. ஜூன்14 ஆம் திகதி பாசிச ஜேர்மனித் துருப்புகள் எதிர்ப்பைச் சந்திக்காது பாரிசினுள் நுழைந்தன. பெரும் நகரம் வெறிச்சோடி, நகரத்தை விட்டு வெளியேறியிருந்தனர்.

ஹிட்லர் ஆக்கிரமிப்பைக் கண்டு அஞ்சி கிராமங்கள், நகரங்களிலிருந்து மக்கள் வெள்ளம் எல்லாப் பாதைகளிலும் நாட்டின் தென்பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

பிரிட்டன் மற்றும் பிரான்சுக்கு எதிராக யுத்தத்தில் இறங்குவதென இத்தாலி 1940 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் திகதி முடிவு செய்தது.



பிரான்சின் சரணடைவதற்கான நிபந்தனைப் பத்திரத்தைக் காணவருகின்ற ஹிட்லர்



சரணடைந்த பிரெஞ்சுத் துருப்புகள் ஜேர்மனியப் படையின் மேற்பார்வையில் அணிவகுத்துவரும் காட்சி

பிரான்ஸ் முழுத் தோல்வியடையும் தறுவாயில் இருக்கிறது என்பதைக் கண்ட முசோலினி, இரையில் பங்கு கேட்பதில் தான், தாமதப்பட்டு விடக்கூடாது என்று அஞ்சினான்... "யுத்தத்தில் பங்கேற்றவன் என்ற வகையில் சமாதான மாநாட்டு மேசையில் உட்கார எனக்கு ஒருசில ஆயிரம் இறந்தவர்கள் மட்டும் போதும்" என்று முசோலினி நயவஞ்சகத்தோடு இத்தாலிய இராணுவத்தின் தலைமை படைத்தளபதி மார்ஷல் படோல்யோவிடம் கூறினான். ஆனால், இத்தாலிக்கும் பிரான்சுக்கும் இடையிலான இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பத்தில் மட்டானவையாகத்தான் இருந்தன. ஜூன் 20 ஆம் திகதி ஆல்ப்ஸ் மலைகளில் பிரெஞ்சுத் துருப்புக்களுக்கு எதிராக இத்தாலியத் துருப்புகள் பொதுத் தாக்குதலைத் தொடுத்த போது இவை பலமான பீரங்கிக் குண்டு வீச்சுக்கு உள்ளாயின, தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. போர் முனையின் தென்பகுதியில் மெண்டோனா பிரதேசத்தில் மட்டும்தான் இவை ஓரளவு முன்னேற முடிந்தது.

**வி.அ.மத்சுலேன்கோ**

சமரசத்தைப் பற்றிய பேச்சுவார்த்தைகள் தொடங்கும் போது பிரான்சின் கணிசமான பரப்பைத் தன்னால் கைப்பற்ற முடியாது என்று அஞ்சிய முசோலினி, லியோன் பிரதேசத்தில் வான் இறக்குப் படையைத் தயார்ப்படுத்துமாறும் ரோனா ஆறுவரை பிரெஞ்சுப் பரப்பைக் கைப்பற்ற முயலுமாறு கட்டளையிட்டான். ஆனால், முசோலினியின் திட்டத்தை ஹிட்லர் ஆதரிக்கவில்லை, இந்த "நடவடிக்கை" நிறைவேற்றப்படவில்லை.

சரணடையும் உடன்படிக்கை கையெழுத்தானதுடன் பிரான்சில் இராணுவ நடவடிக்கைகள் 1940 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் திகதி முடிவடைந்தன. 1918 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி பிரெஞ்சுத் தலைமைத் தளபதி மார்ஷல் ஃபோஷ் எந்த பெட்டியில் கம்பியேன் காட்டில் காய்சர் ஜேர்மனியின் சரணாகதியை ஏற்றானோ அதே பெட்டியில் பெட்டேன் அரசாங்கம் சரணாகதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.

சரணாகதி உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி பிரெஞ்சுப் பரப்பு இரு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பு ஆட்சி நிறுவப்பட்டது. தென் பகுதியில் ஹிட்லர் ஜேர்மனியின் பொம்மையாக தேசியவிரோத பெட்டேன் ஆட்சி நிலைநாட்டப் பட்டது.

இதுதான் விஷி அரசாங்கம் என்று அழைக்கப்பட்டது. இவ்வாறாக பிரான்சின் பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு ஜேர்மனியர் களால் ஆக் கிரமிக்கப்பட்டது, எஞ்சிய பகுதியில் ஜேர் மனியைச் சார்ந்திருந்த பெட்டேன் அரசாங்கம் ஆட்சி செய்தது.

இரண்டுநாட்கள் கழித்து பிரான் சிற்கும் இத்தாலிக்கும் இடையில் சமரச உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த உடன்படிக்கையின்படி இத்தாலி 28 ஆயிரத்து 500 மக்கட் தொகையுடைய 832 சதுரகிலோ மீற்றர் பிரெஞ்சுப் பரப்பை ஆக்கிரமித்தது. இதுதவிர இத்தாலி- பிரெஞ்சு எல்லையில் 50 கிலோமீற்றர் தூரம் உட்பகுதிவரை எல்லைப்புற அரண்களை பிரான்ஸ், படைக்கலைப்பிற்கு உள்ளாக்க வேண்டும், துலோன், பிஸேர்டா, அயாச்சோ, ஒரான் துறைமுகங்களில், அல்ஜீரியா, துனீஷியா மற்றும் பிரெஞ்சு, சோமாலியாவின் கரை ஆகியவற்றின் குறிப்பிட்ட பிரதேசங்களின் இராணுவத் தன்மையை அகற்ற வேண்டும்.

பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் இவர்களின் கையாட்களுக்கு எதிரான நாட்டின் விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்துவதற்காக 1940 ஆம் ஆண்டு ஜூன் இறுதியில் லண்டனில் ஜெனரல் ஷார்ல் டெகோலின் தலைமையில் சுதந்திர பிரான்ஸ் எனும் தேசபக்த ஸ்தாபனம் தோற்றுவிக்கப்பட்டது. அதே நேரத்தில் பிரான்சில் எதிர்ப்பு இயக்கம் வளர்ந்து வந்தது.

1941 ஆம் ஆண்டு மே மாதம் பிரான்சில் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் முன்மொழிவின் பேரில் வெகுஜன தேசபக்த ஸ்தாபனம், அதாவது, தேசிய முன்னணியும் இராணுவமாகிய பிரந்திரியோர்



கெய்டெல் ஜேர்மனியின் சார்பில் கையொப்பம் இடுகிறார்

அணிகளும் கொரில்லாப்படையும் தோற்றுவிக்கப்படலாயின.

1941 ஆம் ஆண்டு செப்ரம்பர் 26 ஆம் திகதி சோவியத் அரசாங்கம் டெகோலை சுதந்திர பிரெஞ்சு நாட்டவரின் தலைவராக அதிகார பூர்வமாக அங்கீகரித்தது. (தொடரும்)

# சிவில் உடையில் பதுங்கியிருந்த சிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாண வைமன் வீதியிலுள்ள வீடொன்றில் சிவில் உடையுடன் பதுங்கியிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரை மடக்கி பிடித்த பொதுமக்கள் பின்னர் அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தகவல் அறிந்து பொலிஸ் நிலையத்துக்கு விரைந்து சென்ற விசேட பாதுகாப்புப்படையினர் அவரைத் தாங்கள் விசாரிப்பதாக கூறி அழைத்துச் சென்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் நடந்துள்ள இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

மாலை 6 மணியளவில் குறித்த நபர் சிவில் உடையில் வைமன் வீதியில் உள்ள வீட்டில் புகுந்து பதுங்கிக் கொண்டார். பின்னர் அந்த வீட்டின் கதவினூடாக அடிக்கடி வீட்டினுள்ளே எட்டிப் பார்த்தபடி இருந்துள்ளார். நேரம் செல்ல வீட்டின் கதவு மூடப்பட்டுவிட்டது. வீட்டுக்காரர் இரவாகி விட்டதால் வெளியே வரவில்லை.

இந்த நபரின் நடவடிக்கையை அவதானித்த அயல் வீட்டுக்காரர் அவரைத் தொடர்ந்து நோட்டமிட்டார்.

அவர் திருட்டு முயற்சிக்காக காத்திருக்கிறார் என்பது தெரியவரவே அவரை மடக்கிப் பிடிக்க அண்மித்த போது அந்த நபர் வீதி வழியே தலைதெறிக்க ஓடினார்.

இது குறித்து அப்பகுதி இளைஞர்களுக்கு ஏற்கனவே தகவல் வழங்கப்பட்டிருந்தது. அதையடுத்து அவர்கள் வீதிகளை சுற்றி வளைத்தனர். சிக்கி கொண்டார் அந்த நபர். அப்போது அந்த நபர்தான் இராணுவச் சிப்பாய் என்று கூறி மன்றாடிக் கொண்டார்.

இது பற்றி யாழ். பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சிவில் உடையில் நின்ற சிப்பாயை கைது செய்து கூட்டிச் சென்றனர்.

இதுபற்றி அறிந்த விசேட பாதுகாப்பு படையினர் அவரைத் தாம் விசாரிப்பதாக கூறி அழைத்துச் சென்றனர். (அ-2)

# போர் தவிர்ந்த ஏனைய அம்சங்களில் அரசாங்கத்திற்கு தோல்வி-கரு ஜயசூரிய

(கொழும்பு)

போர் தவிர்ந்த ஏனைய சகல அம்சங்களிலும் அரசாங்கம் தோல்வியைத் தழுவியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கப்பம் கோரல், ஊழல் மோசடிகள் நாட்டில் வெகுவாக உயர்வடையந்துள்ளன. போரை வென்றெடுத்த கௌரவம் இந்த அரசாங்கத்தை சாரும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

எனினும் போரின் போது கூடுதல் அர்ப்பணிப்புக்களைச் செய்த சரத் பொன்சேகா இன்று சிறையில் வாடுகின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியை குழப்பும் நோக்கம்தமக்கில்லை எனவும் நாட்டு மக்களின் தேவைகளுக்காக என்றும் குரல் கொடுத்தோம் என்று கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சம்பளத்தை 45 வீதத்தால் அதிகரிக்கும் வரை போராடுவோம்

## தேசிய ஊழியர் சங்கம்

(கொழும்பு)

கூட்டுத்தாபனங்கள் மற்றும் அதிகார சபை ஊழியர்களின் சம்பளத்தை 45 வீதத்தால் அதிகரிக்கும் வரை போராடவுள்ளதாக தேசிய ஊழியர் சங்கம் தெரிவிக்கின்றது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஊழியர்களுக்கு நியாயமான சம்பள அதிகரிப்பாக 45 வீத சம்பள அதிகரிப்பு வழ்ங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அந்த சம்பள உயர்வு கிடைக்கும் வரை மிகவும் பொறுமையாகவும் அவதானத்துடனும் போராட்டத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல போவதாக அவர் கூறியுள்ளார்.

தேசிய ஊழியர் சங்கத்தின் தொழிற்சங்க தலைவர்களும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (அ-2)

# தமிழக மீனவர்கள் 43 பேர் இன்று விடுவிக்கப்படுவர்?

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் கைதான தமிழகத்தைச் சேர்ந்த 43 மீனவர்கள் இன்று விடுவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டைப் பகுதியைச் சேர்ந்த இவர்களும் அவர்கள் பயணித்த ஆறு விசைப் படகுகளும் விடுவிக்கப்பட்டு இந்திய கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படுவதாக தமிழக அரசின் நாகை மாவட்ட துணை மீன்வளத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இலங்கை கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் மீன்பிடித்ததாக அவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை பிரதேசத்தின் வடகடல் பரப்பில் இவர்கள் சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்தார்கள் என்று கூறப்பட்டு கைது செய்யப்பட்ட இவர்கள் விசாரணைகளுக்காக அங்குள்ள துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக பயன்படுத்திய ஆறு இயந்திரப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு திருகோணமலை துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தமிழக மீனவர்கள் இலங்கையின் வட கடல் பரப்பில் சட்டவிரோதமான முறையில் அத்துமீறி மீன்பிடிக்கிறார்கள் என்று இலங்கை தரப்பில் தொடர்ந்து புகார் கூறப்பட்டு வருகிறது.

தற்போது மீன் வளம் கூடுதலாக இருக்கும் கிழக்கிலங்கையின் புல்மோட்டைப் பகுதிக்கு தமிழக மீனவர்கள் வருவது ஏற்கனவே இரு நாடுகளுக்கும் இடையே மீனவர்கள் பிரச்சினையினால் ஏற்படும் உரசல்கள் மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இந்திய-இலங்கை கடற்பரப்பில் இருநாட்டு மீனவர்களும் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக இருவரும் வாரத்தில் மூன்று நாட்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்லலாம் என இந்திய குடியரசின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தக் கருத்துக்கு இந்திய மீனவர்கள் ஆதரவு தெரிவித்தாலும் இலங்கை தரப்பினர் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய யோசனை அல்ல என்று கூறியுள்ளனர்.

திருகோணமலையில் கைது செய்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் யாரையும் சந்திக்க செய்தியாளர்கள் அனுமதிக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலைப்பீடம், இராமநாதன் நுண்கலைக்கழகம்

## பரீட்சை அட்டவணை தொடர்பான அறிவித்தல்

இராமநாதன் நுண்கலைக்கழக 1ஆம், 2ஆம், 3ஆம் வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டு அறிமுறைப் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகும்.

| | |
|---|---|
| 1 ஆம் வருடம் | 16.02.2012 |
| 2ஆம் வருடம் | 13.02.2012 |
| 3ஆம் வருடம் | 08.02.2012 |

விரிவான பரீட்சை அட்டவணைகளை கலைப்பீடம் மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகம் ஆகிய பகுதிகளிலுள்ள விளம்பரப்பலகைகளில் பார்வையிடலாம்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சீ-5674)



## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.01.2011 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 2012.03.24 (சனிக்கிழமை) முற்பகல் 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.


| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| காங்கேசன்துறை | மானிப்பாய் |
| யாழ்.பிரளதான வீதி | மல்லாகம் |
| ஊர்காவற்றுறை | உரும்பிராய் |
| நெல்லியடி | புத்தூர் |
| அச்சுவேலி | பண்டத்தரிப்பு |
| சங்கானை | கோப்பாய் |
| சுன்னாகம் | கொடிகாமம் |
| சாவகச்சேரி | உடுப்பிட்டி |
| வல்வெட்டித்துறை | திருநெல்வேலி |
| யாழ்.பல்கலைக்கழகம் | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

2012.01.23

(சீ-5675)







புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக் கிளையினால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான சுயமுயற்சி கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கடன் அதிகாரி ஜனனி வைரவநாதன் மங்கல விளக்கேற்றுவதனையும் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி உரையாற்றுவதனையும் யாழ். பிரதேச முகாமையாளர் எஸ்.என்.மாணிக்கசிங்கி பயனாளி ஒருவருக்கு கடன் வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

# பொருளாதார வளர்ச்சியில் இலங்கைக்கு 4 ஆவது இடம்

## பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையின் படி உலகில் நான்காவது சிறந்த பொருளாதார வளர்ச்சி மிக்க நாடாக இலங்கை விளங்குவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்செய்தியாளர் மாநாட்டின் போதே பசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது உலகில் சிறந்த பொருளாதார வளர்ச்சி மிக்க நாடாக சீனா விளங்குவதாகக் குறிப்பிட்ட பசில் ராஜபக்ஷ அடுத்த வருடம் இரண்டாம் இடத்தை இலங்கை அடைய முடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கையும் சீனாவும் தவிர்ந்த எல்லா நாடுகளதும் பொருளாதார வளர்ச்சி குறைவடைந்திருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் கூறினார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான செய்தியாளர் மாநாடு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (அ-2)

# ஊடக சுதந்திர பட்டியலில் இலங்கைக்கு 163 ஆவது இடம்

(கொழும்பு)

பிரான்சை தலைமையகமாக கொண்ட எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பினால் ஆண்டு தோறும் வெளியிடப்படும் ஊடக சுதந்திரம் குறித்த பட்டியலில் இந்த ஆண்டில் இலங்கை பின்தள்ளப்பட்டுள்ளது.

கடந்த 2011 தொடக்கம் 12 ஆம் ஆண்டுக்கான இந்தப் பட்டியலில் இலங்கைக்கு 163 ஆவது இடமே கிடைத்துள்ளது.

கடந்த ஆண்டில் இலங்கை 158 ஆவது இடத்தில் இருந்தது. இங்கு போர் தீவிரமாக இடம்பெற்ற 2009 ஆம் ஆண்டில் கூட 162 ஆவது இடத்திலேயே இலங்கை வரிசைப் படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஊடகங்கள் மீதான கெடுபிடிகள், தாக்குதல்கள், இணையத் தளங்கள் மீதான நேரடியான கட்டுப்பாடுகள், தணிக்கைகள் காரணமாகவே இலங்கை இந்தப் பட்டியலில் பின்தள்ளப்பட்டதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் பட்டியலில் முதலாவது இடத்தை பின்லாந்தும் நோர்வேயும் மூன்றாவது இடத்தை எஸ்தோனியாவும் நெதர்லாந்தும் பிடித்துள்ளன. 179 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் கடைசி இடத்தை எரித்தியா பெற்றுள்ளது.

(அ-2)

# வீதி விபத்தில் நான்கு பேர் பலி

(கொழும்பு)

களுத்துறையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் நான்கு பேர் பலியானதுடன் 7 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வான் ஒன்று தீப்பற்றிக் கொண்டபோது அதில் இருந்த இரண்டு சிறுவர்கள் மற்றும் இரண்டு பெண்கள் பலியாகியுள்ளனர்.

காயமடைந்த நபர்கள் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

2012.01
27

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1695-ஒட்டோமான் பேரரசின் மன்னன் இரண்டாம் அஹமது இறந்ததை அடுத்து இரண்டாம் முஸ்தபா மன்னனானான்.

★ 1880-தோமஸ் எடிசன் வெள்ளொளிர்வு விளக்குக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1888- தேசிய புவியியற் கழகம் (National Geographic Society) வோஷிங்டன் டிசியில் அமைக்கப்பட்டது.

★ 1915- ஐக்கிய அமெரிக்க கடற்படையினர் ஹெயிட்டியை ஆக்கிரமித்தனர்.

★ 1918-பின்லாந்தில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

★ 1924-விளாடிமிர் லெனினின் உடல் மொஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் மாலை 4.00 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

★ 1926-ஜோன் லோகி பயார்ட் முதல் தொலைக்காட்சி ஒளிபரப்பை நடத்திக் காட்டினார்.

★ 1938-நியூயோர்க்கில் நயாகரா நீர் வீழ்ச்சியில் நயாகரா பாலம் உடைந்து வீழ்ந்தது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: அச்சு நாடுகளின் இரண்டாண்டு லெனின் கிராட் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்தது.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: இலட்சக்கணக்கான யூதர்கள் குரூரமாகக் கொல்லப்பட்ட போலந்தின் அவுஷ்விட்ஸ் சித்திரவதை முகா மில் எஞ்சியிருந்த கைதிகள் 7 ஆயிரத்து 600 பேர் சோவியத் செம்படையினரால் விடுவிக்கப் பட்டனர்.

★ 1967-அப்பலோ 1 விண்வெளி வீரர்கள் மூவர் கென்னடி விண்வெளி மையத்தில் தமது விண்கலத்தைப் பரிசோதிக்கும் போது இடம் பெற்ற தீ விபத்தில் உயிரிழந்தனர்.

★ 1973-வியட்நாம் போரை முடிவுக்குக் கொண்டு வந்த உடன்பாடு பாரிசில் எட்டப்பட்டது.

★ 1996- நைஜரில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் நாட்டின் முதலாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மஹமான் ஊஸ்மன் பதவியிலிருந்து அகற்றப்பட்டு இராணுவத் தளபதி இப்ராகிம் மயினாசரா ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

★ 2002-நைஜீரியாவின் லாகோஸ் நகரில் இராணுவக் களஞ்சியமொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1756-வொல் ஃப்கேங்க் அமதியுஸ் மோட்ஸார்ட், ஐரோப்பிய செவ்வியல் இசையமைப்பாளர் (இ.1791)

★ 1775-பிரீடரிக் ஷெல்லிங், ஜேர்மனிய மெய்யியல் அறிஞர் (இ.1854)

★ 1832-லூயிஸ் கரோல், ஆங்கில எழுத்தாளர், கணிதவியலாளர், கிறித்துவப் பாதிரியார் (இ.1898)

★ 1903-ஜோன் எக்கில்ஸ், நோபல் பரிசு பெற்ற அவுஸ்திரேலியர் (இ.1997)

★ 1936-சாமுவேல் டிங், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்


★ 1944-மைரேயட் கொரிகன், நோபல் பரிசு பெற்றவர்

★ 1974-சமிந்த வாஸ், இலங்கைத் துடுப்பாட்ட வீரர்

### இறப்புக்கள்

★ 1814-ஜொகான் ஃபிக்டே, ஜேர்மனிய மெய்யியல் அறிஞர் (பி.1762)

★ 1893-மகா வைத்தியநாத ஐயர், கர்நாடக இசைப் பாடகர் (பி. 1844)



★ 1967-அப்பலோ-1 விண்வெளி வீரர்களான எட்வர்ட் வைட் (பி.1930), வேர்ஜில் கிறிசம் (பி.1926), றொஜர் காபி (பி.1935) ஆகியோரின் நினைவு தினம்.

# கிருஷ்ணாவின் வருகை இந்தியாவிற்காகவா? தமிழ்மக்களுக்காகவா?



**முத்துக்குமார்**
**நன்றி: இணையம்**

மேற்குலகத்தைப் பொறுத்தவரை போர்க்குற்றத்தை கருவியாகப்பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்தை பணிய வைக்கவே தற்போது முயற்சிக்கின்றது. இது சரிவராதபோது, இரண்டாவது கட்ட முன்னெடுப்பாக ஆட்சி அதிகாரத்தில் ஆள் மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்கும். பசில் ராஜபக்ஷவினை முன்னிறுத்த விரும்புவதாக ஒரு தகவல். சில வேளைகளில் கோத்தபாய ராஜபக்ஷவினை மஹிந்தவிடமிருந்து கழற்றி, மஹிந்தவை பணிய வைக்க முயற்சிக்கலாம். அல்லது இராணுவப் புரட்சிக்குக்கூடத் தூண்டுதல்களை



மேற்கொள்ளலாம்.

இரண்டாவது கட்டமும் சரிவராதபோது, மூன்றாவது கட்டமான ஆட்சி மாற்றத்துக்கும் முயற்சிக்கலாம். பொருளாதார ரீதியான அழுத்தங்கைளையும் கொடுக்க முற்படலாம். ஆளும் கட்சியை உடைத்து வேறு கட்சிகளில் உள்ளவர்களையும் சேர்த்து, ஒரு புதிய அரசாங்கத்தை அமைக்க முற்படலாம்.

இந்த மூன்று கட்டங்களையும் தாண்டும்வரை தமிழ்த்தேசிய அரசியல் ஒருதீவிர கட்டத்திற்கு செல்வதை தடுக்கவே பார்க்கும். அரசியல் தீர்வினை 13-வது திருத்தத்துடனேயே மட்டுப்படுத்தி வைத்திருக்கும். தமிழ் அரசியல் தலைமையும் கூட்டமைப்பிடம் இருப்பதையே ஊக்குவிக்கும். இக்கட்டங்களில் சுயநிர்ணயத்தை வற்புறுத்தும் அமைப்புக்கள் எழுச்சியடைந்தால் அதனைப் பலவீனப்படுத்தவே முயற்சிக்கும்.

இம்மூன்று கட்டங்களுக்கும் இலங்கை அரசாங்கம் பணிய மறுத்தால், நான்காவது கட்டமாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதைத் தவிர வேறு தெரிவு மேற்குலகத்திற்கு இருக்கப் போவதில்லை. அதிகார சமநிலையை உருவாக்குவதற்கு அது மிகமிக அவசியமாகவே இருக்கும். இக்கட்டம் வந்துவிட்டால், போர்க்குற்றம் என்ற விடயத்தை இனப்படுகொலை என்ற கட்டத்திற்கும் கொண்டு செல்லப் பார்க்கும்.

உண்மையில் மேற்குலகமும் தமிழ்த் தேசமும் தத்தமது நலன்களிலிருந்து சந்திக்கக்கூடிய பொதுப்புள்ளி இது தான். வரலாறு இதனை நோக்கி நகர்கிறது என்பதுதான் இந்தியாவுக்குள்ள அச்சம். தமிழ் மக்கள் சுயநிர்ணயம் உடைய தீர்வினைப் பெறப்போவதை இந்தியா விரும்பப்போவதில்லை.

நான்காவது நெருக்கடி தமிழ் அரசியல் தன்னை விட்டு விலகிவிடும் என்ற அச்சமாகும். தமிழ் அரசியலை தனது செல்வாக்கின் கீழ் கொண்டுவருவதற்கு இந்தியா 30 வருடங்களாக முயற்சித்தது. புலிகளின் அழிவை தொடர்ந்துதான் அதற்கு வெற்றி கிடைத்தது. அதுவும் சம்பந்தன் தலைமைபோல, இந்தியாவிற்குப் பணிந்து போகும் தமிழ்த் தலைமை இந்தியாவிற்கு ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை. இதனால், கூட்டமைப்பு தன்னை விட்டு விலகுவதை அது விரும்பவில்லை.

இனவிவகாரம் இந்தியாவின் கையைவிட்டு விலகினால் தமிழ் அரசியலும் இந்தியாவைவிட்டு விலகுவது தவிர்க்க முடியாதது. அதுவும் மேற்குலகை நோக்கியே நகரப்பார்க்கும். மேற்குலக ஜனநாயக விழுமியங்கள் தமிழ் மக்களை இந்தியாவைவிட அதிக அளவில் கவரவே செய்யும். இந்தியாவைப்போல் 13-வது திருத்தத்துடன் நிற்காது மேற்குலக ஜனநாயக விழுமியங்கள் இரு தேசக்கோட்பாடுவரை நெகிழ்ச்சியடைக்கூடியவை. இது தமிழ் மக்களை கவருவதற்கான வாய்ப்புக்களை அதிகம் கொடுக்கும்.

இந்த நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக 13-வது திருத்தத்துடன் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இந்தியா விரும்புகின்றது. ஆனால், அதற்குள்ள கவலை 13-வது திருத்தத்திற்கும் இலங்கை தயாரில்லாமல் இருக்கின்றது என்பதுதான்.

ஐந்தாவது நெருக்கடி தமிழ்நாட்டிலிருந்து வருகின்ற அழுத்தங்களாகும். தமிழ் மக்களின் அழிவிற்கும் தமிழ் அரசியலின் வலிமைநிலை வீழ்ச்சிக்கும் இந்தியாதான் காரணம் என்பதை தமிழக மக்கள் தெளிவாகவே தற்போது புரிந்து கொண்டுள்ளனர். இதனால், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மீதான கோபம் அவர்களிடம் அதிகமாகவே ஏற்பட்டுள்ளது. தேர்தல்களில் தொடர்ச்சியாக காங்கிரஸ் தமிழ்நாட்டில் படுதோல்வியடைவதற்கும் இதுவே பிரதான காரணம். இப்போக்கு தமிழ்நாட்டில் தமிழகத் தமிழ்த் தேசியம் வளர்வதற்கும் காரணமாக அமைந்துவிடும் என்ற அச்சமும் இந்தியாவிற்கு உண்டு.

ஈழத்தமிழர்கள் தொடர்பாக தாம் ஏதாவது செய்யாவிட்டால் இந்த நிலை நீடிக்கும் என்றே காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். 13-வது திருத்தத்தையாவது அமுல்படுத்தி இந்த ஆபத்திலிருந்து தப்ப அவர்கள் விரும்புகின்றனர். எனவே இந்த நெருக்கடிகளிலிருந்து விடுபட வேண்டுமானால், கூட்டமைப்பு-அரசு பேச்சுவார்த்தை ஏதோ ஒரு வகையில் தொடரவேண்டும் என்றே இந்திய விரும்புகின்றது.

கிருஷ்ணா கூட்டமைப்புடனும் அரசுடனும் என்ன பேசினார் என்கின்ற உண்மையான விடயங்கள் தற்போதைக்கு வெளியில் வரப்போவதில்லை. கசிந்துவருகின்ற தகவல்களின்படி இரண்டு விடயங்களுக்கு கிருஷ்ணா முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்றே தெரியவருகின்றது.

ஒன்று, பேச்சுவார்த்தையை தொடர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும். தற்போது காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம், வடகிழக்கு இணைப்பு என்பன தொடர்பாகவே இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தீர்க்கும் வகையில் காணி விவகாரத்திற்கு காணி ஆணைக்குழு ஒன்றினை உருவாக்குவது என உடன்பாடு கண்டுள்ளதாக தகவல்கள் வருகின்றன. இவ் ஆணைக்குழுவில் சகல மாகாணங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழுவே காணி விவகாரங்களை கையாளுமென்றும் கூறப்படகின்றது. ஆணைக்குழுவில் வடமாகாணத்திலிருந்து மட்டுமே தமிழர் பிரதிநிதித்துவத்திற்கு வாய்ப்பு உள்ளது. பெரும்பான்மையாக சிங்



கள உறுப்பினர்களே குழுவில் இருக்கப்போகின்றனர். இந்த நிலையில் காணி ஆணைக்குழு ஒருபோதும் தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்கப்போவதில்லை. காணி பறிப்புகள் தொடரவே போகின்றன.

பொலிஸ் அதிகாரத்தைப் பொறுத்தவரை சிறு குற்றங்கள் தொடர்பான அதிகாரங்களை வழங்குவதற்கு உடன்பாடு கண்டுள்ளதாகவும் தகவல்கள் வருகின்றன. இதன்படி பார்த்தால் பிற்பொக்கற் கள்ளர்களை கண்டு பிடிக்கும் பொலிஸ் அதிகாரம் மட்டுமே தமிழ் மக்களுக்கு கிடைக்கும்.

வடகிழக்கு இணைப்பைப் பொறுத்தவரை எதுவும் செய்யமுடியாது என முழுமையாகவே அரசு கைவிரித்ததாக தகவல். துரதிர்ஷ்டவசமாக இக் கைவிரிப்பை கூட்டமைப்பும் ஏற்றுக் கொண்டதாகவே செய்திகள் வருகின்றன.

அதிகாரப் பகிர்வுப்பாதையை பேச்சுவார்த்தைக்குத் தேர்ந்தெடுத்தால், இந்த அவலங்களைச் சந்திக்க வேண்டியதுதான். சுயநிர்ணய உரிமைப் பாதையைத் தேர்ந்தெடுத்திருந்தால் இந்த விவகாரங்களைப் பற்றி கதைக்கவேண்டிய தேவையே இருந்திருக்காது. ஏனெனில் இவையெல்லாம் ஒருதேசிய இனத்திற்கு இயல்பாகவே இருப்பவை. கூட்டமைப்பு பொல்லைக் கொடுத்து அடியை வாங்குகிறது. இந்த உடன்பாடுகள் உண்மையென்றால், கூட்டமைப்பு தெரிவுக்குழுவிலும் பங்கு பற்றும் என்றே எதிர்பார்க்கலாம். இன்னும் சில நாட்களில் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, நாம் தெரிவுக் குழுவில் பங்குபற்றுகின்றோம் என கூட்டமைப்பு அறிக்கைவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இரண்டாவது, வட மாகாண சபைத் தேர்தலை நடாத்தும்படி அரசாங்கத்தைத் தூண்டுவதாகும். இராணுவ நிர்வாகத்தை நெகிழ்ச்சிக்குள்ளாக்க வேண்டிவரும் என்ற அச்சம் காரணமாகவே அரசாங்கம் தேர்தலை நடாத்த பின்னின்றது. இந்தியா அழுத்தம் கொடுத்தாலும் தேர்தலை நடாத்த அரசு முன்வரும் என்பது சந்தேகமே.

ஆனாலும், இது விடயத்தில் இந்தியாவிற்கு ஒரு வெற்றி கிடைத்துள்ளது. என்றே கூற வேண்டும். இன்று மனோகணேசன் தொடக்கம் சில மூத்த ஊடகவியலாளர்கள் வரை "வடமாகாண சபைத்தேர்தலை நடாத்து" என்ற கோசத்தினை முன்வைக்கின்றனர். தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கோசத்தை வடமாகாண சபைத்தேர்தல் கோசமாக சுருக்கி விடமுயற்சிக்கின்றனர்.

இந்தியாவின் எதிர்பார்ப்பும் இது தான். தமிழ் மக்களின் அரசியலை 13வது திருத்தத்திற்குள் சுருக்கி விடுதல் என்பதே அந்த எதிர்பார்ப்பு.

கிருஷ்ணா வரும்போது எல்லாம், தமிழ்த் தேசிய சக்திகள் பதட்டம் அடைய வேண்டிய நிலை. ஏனெனில், அவர் ஒவ்வொரு முறைவரும் போதும் தமிழ்த் தேசிய அரசியலை விலை பேசுகின்றார்.

(முற்றும்)

# சிறைச்சாலைகளில் எமக்கு பாதுகாப்பில்லை

# புனர்வாழ்வு முகாமுக்கு எம்மை மாற்றுங்கள்

## தமிழ் அரசியல்கைதிகள் கோரிக்கை

இலங்கையிலுள்ள எந்தவொரு சிறைச்சாலையிலும் எமக்குப் பாதுகாப்பு இல்லை. எனவே எம்மை புனர்வாழ்வு அமைச்சின் கண்காணிப்பின் கீழ் உள்ள புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய மகசின் சிறைச்சாலையில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற மோதல் சம்பவத்தையடுத்து அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த 190 தமிழ் அரசியல் கைதிகள் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக இவர்களில் 180 பேர் களுத்துறை சிறைச்சாலைக்கும் 10 பேர் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்கும் அவசர அவசரமாக மாற்றப்பட்டிருந்தனர்.

இவ்வாறு மாற்றப்பட்டுள்ள அரசியல் கைதிகளே தம்மை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

புதிய மகசின் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலின்போது தம்மீதும் தாக்குதல் நடத்தமுயற்சிக்கப்பட்டமையினால் தமக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குமாறும் கைதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து தமிழ்அரசியல்கைதிகள் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மகசின் சிறைச்சாலையில் புதிதாக நியமனம் பெற்ற சிறைச்சாலை அத்தியட்சகர் எமில் நிரஞ்சன் கைதிகளுக்கு வீட்டிலிருந்து கொண்டுவரப்படும் உணவுப் பொதிகள், பால்மா உட்பட அனைத்தையும் சல்லடையிட்டு பரிசோதிப்பதாகவும் கைதிகளுக்கு எதிராக கடுமையான சட்டங்களை முன்னெடுப்பதாகவும் இதனை எதிர்த்துத் தாம் போராட்டம் நடத்தப்போவதாகவும் சிங்களக் கைதிகள் தெரிவித்திருந்தனர்.

நாம் தடுத்துவைக்கப்பட்டிருந்த கே.ஜே.எச். பிரிவுகளுக்குள் வந்த சிங்கள கைதிகள் தமது போராட்டத்திற்கு எம்மையும் ஆதரவு வழங்குமாறு கோரினர். அதனை நாம் நிராகரித்தோம். பிரச்சினை திசை திரும்பிவிடும் என்பதனால் நாம் அந்தப்போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த சிங்களக் கைதிகளை நாம் அடைத்துவைக்கப்பட்டிருந்த பிரிவுகளின் கதவுகளை உடைக்க முயன்றனர். தெய்வாதீனமாக தாக்குதல் சம்பவம் இடம்பெறவில்லை.

புதிய மகசின் சிறைச்சாலையில் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் சிறைச்சாலைகள் ஆணையாளர் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஆகியோர் எம்மைச் சந்தித்து விசேட நீதிமன்றத்தின் முன் விசாரணைகளை நடத்தி புனர்வாழ்வு வழங்கப்படும் என உறுதியளித்துள்ளனர்.

சிறைச்சாலைகளில் எமக்கு உயிர் பாதுகாப்புக் கிடையாது. எனவே புனர்வாழ்வு அமைச்சின் கண்காணிப்பின் கீழ் தமிழ்ப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கும் புனர்வாழ்வு முகாமுக்கு எம்மை அனுப்புமாறு கோரிக்கை விடுக்கின்றோம். (அ-2)

# ஹெட்டியில் சிறுவர் துஷ்பிரயோகம்; இலங்கை படையினர் மீது விசாரணை

## ஐக்கிய நாடுகள் சபை உத்தரவு

இலத்தீன் அமெரிக்க நாடான ஹெய்ட்டியில் பணியில் ஈடுபட்டுள்ள ஐ.நா அமைதி காக்கும் படையினர் சிறுவர்களை துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியமை தொடர்பாக விசாரணை செய்யுமாறு ஐ.நா உத்தரவிட்டுள்ளது.

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைச்சபையின் கூட்டத்தொடரில் இவ்விவகாரம் குறித்தான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் விசாரணைக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஹெய்ட்டியில் ஐ.நா அமைதிகாக்கும் படையில் அங்கம்வகித்த 3 அதிகாரிகள் உட்பட 114 இலங்கைப்படையினர் மீது துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கள் இனங்காணப்பட்டு குறித்த படையினர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

ஐ.நா. அமைதிகாக்கும் படையினர் மீதான குற்றச்சாட்டுக்கள் ஐ.நா. அமைதிகாக்கும் படையில் அங்கம் வகிக்கும் அந்த நாடுகளின் உள்நாட்டு நீதிமன்றத்திலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என சமீபத்தில் ஐ.நா. தெரிவித்திருந்தது.

இந்நிலையில் சிறுவர்கள் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஐ.நா. அமைதி காக்கும் படையில் அங்கம் வகித்த உக்ரேய்ன் நாட்டு படையினர் ஐவரை அந்நாட்டு நீதிமன்றம் விடுவித்த நிலையிலேயே இவ்விவகாரம் ஹெய்ட்டியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது.

ஹெய்ட்டியில் உள்ள ஊடகங்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்களின் கடும் கண்டனத்தைத் தொடர்ந்து கள விசாரணைக்கு ஐ.நா. உத்தரவிட்டுள்ளதாக ஹெய்ட்டியின் அலேட் பிரஸ் ஊடகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஹெய்ட்டியில் இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட படையினர் மீது இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பது பற்றி செய்திகள் ஏதும் இல்லை என அக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

தற்போது ஐ.நாவினால் அறிவிக்கப்பட்டுள்ள கள விசாரணையின் போது குற்றம் சுமத்தப்பட்ட அனைத்து நாட்டு படையினர் அறிந்தும் விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## நிர்வாக தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்க வரணி வடக்கு கிளையின் நிர்வாகத் தெரிவு அண்மையில் வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்றது.

இதில் தலைவராக வீ.பாலசிங்கம், செயலாளராக சி.அருணாசலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 6 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.(அ-3-29)

## இரண்டாவது ஆண்டு நிறைவு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு நேற்றுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் ஜனாதிபதி இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலையில் இலங்கை பாரிய பொருளாதாரஅபிவிருத்தியை அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுக்குழுவினர் நாமல்ல!

## கரு, சஜித் தெரிவிப்பு

தாம் தொடர்ந்தும் ஐக்கியதேசியக் கட்சியில் இருப்பதாகவும் தாம் மாற்று அணியினர் அல்ல எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருஜயசூரிய, சஜித் பிரேமதாச ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய இவர்கள் ஐக்கியதேசியக்கட்சியில் மாற்று அணியை ஏற்படுத்தவோ தனிக்கட்சியை தொடங்கவோ எண்ணவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

மக்களின் கருத்தை அறிந்தே தாம் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டதாகவும் கட்சியைப் பாதுகாக்கும் நோக்கில்தான் அந்த முடிவை எடுத்திருந்ததாகவும் கருஜயசூரிய இதன்போது கூறியுள்ளார்.

எனினும் கட்சியின் தலைவர் தேர்தலுக்குப் பின்னர் தமக்கு எதிராக தொடர்ந்தும் பழிவாங்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து தாம் கவலையடைவதாகவும் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வலுவான அணி ஒன்று இருப்பதாகவும் நாடு விழுந்துள்ள ஆதாளபாதாளத்தில் இருந்து நாட்டை ஐக்கியதேசியக் கட்சியினால் மாத்திரமே மீட்கமுடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து கண்டனம் வெளியிட்டுள்ள ஜயசூரிய தாக்குதலில் தொடர்புள்ளவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (அ-2)



கிளி / செல்லியாதீவு அ.த.க பாடசாலையின் பொங்கல்விழா அண்மையில் பாடசாலை அதிபர் சே.அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்றது. இப்பொங்கல் விழாவின் போது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் நிற்பதனைப் படத்தில் காணலாம்.

# தேரரை ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பாடசாலை மாணவியை (வயது-12) ஒரு வருடத்திற்கும் மேலாக பல தடவைகள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு பிணையில் விடுவிடுக்கப்பட்டுள்ள மிஹிந்தலை ரஜமகா விஹாரையின் விஹாராதிபதி நாமல் வெவ ரத்தினசார தேரர் ஜூன் மாதம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அநுராதபுரம் நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான ருவந்திக்கா மாரபன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை தொடர்வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளதாகவும் அந்த ஆலோசனைகள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளது.

பிரதிவாதியான தேரருக்கு குறித்த சிறுமியை விற்றதாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த சிறுமியை விற்றதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த சிறுமியின் பாட்டிக்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட 75 ஆயிரம் ரூபா பிணையை 25 ஆயிரம் ரூபா வரை குறைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-2)

# இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்

## திருக்குடமுழுக்கு விழா

வடக்கின் மிகப்பெரிய நன்னீரேரியான இரணைமடு நீர்த்தேக்கத்தின் மேற்குக் கரையில் குளத்தை நோக்கியபடி வியாபித்திருக்கும் சக்தியாம் திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் அவனியெல்லாம் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றாள்.

இக்கோயில் யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையின் தவமுதல்வர் யோகர்சுவாமிகளின் உள்ளத்தில் உதித்து கோயிலின் அமைவிடம், மூலமூர்த்தி, மூலமூர்த்தியின் நாமம் பொதுமக்கள் பங்கெடுக்கும் பொங்கல் என்பனவெல்லாம் சுவாமியின் வழிகாட்டலிலே இனிதே இடம்பெற்று வந்தது.

குளத்தின் காவல்தெய்வமாக உள்ள அம்பாளுக்கு நன்றிக்கடனாக ஆயிரம் பானைகள் வைத்து பொங்குங்கள் என்று சுவாமி அவர்கள் தெரிவித்திருந்தார். அதற்கமைவாக இன்றைய தேரோடும் நாட்களிலும் மக்கள் பெரும்விழாவாக கொண்டாடி வருகின்றனர்.

அன்றைய நாள் பெண்கள் விரதமிருந்து கும்ப தீர்த்தம் எடுத்து திருவடிகளில் சமர்ப்பித்து நேர்த்தி நிறைவு செய்கின்றனர். வன்னி விவசாயிகள் அடியவர்கள், ஆண்கள், பெண்கள் என எல்லோரும் குடும்பமாகக் கூடி இந்த நிகழ்ச்சியை இனிதே நிறைவு செய்கின்றனர்.

பங்குனித்திங்கள் இரண்டாம் வாரம் அம்பாளின் கிராமங்கள் தோறும் ஊர் உலா நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. இதனால் கிராமங்கள் தோறுமுள்ள கோயில்களின் தொடர்பும் ஊர்மக்களின் உறவும் வலுவடைகின்றது. ஒருவாரமாக நடைபெறும் இவ்வூர்வலத்தில் மக்கள் வீதிகளைச் சுத்தம்செய்து, நீர் தெளித்து, மாவிலை, தோரணம் கட்டி வரவேற்கின்றனர். நெல்மூடைகளையும் தானியங்களையும் காணிக்கையாகக் கொடுக்கின்றனர். அம்பாள் கிராமங்கள்தோறும் ஊர்உலாவந்தால் ஊரில் நோய் நொடி தோன்றாது, கிராமத்து வான் பயிர்களும் நெற்பயிர்களும் செழிக்கும், கால்நடை பெருகும், பால் வளம் பெருகும் என்று நம்புகின்றனர். இதனால் இவ்விழாவை சிறப்புறக் கொண்டாடுகின்றனர்.

சித்திரைப்பூரணைப் பொங்கலோடு தொடங்கிய விழா பின்னர் 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலங்காரத் திருவிழாவாக வளர்ந்து தொடர்ந்தும் கொடியேற்றத் திருவிழாவாக ஏற்றங்கண்டுள்ளது. இக்கோயிலில் உள்ள அழகிய மூன்று சித்திரத்தேர்களில் பிள்ளையார், வள்ளி, தெய்வானையுடன் உள்ள முருகன் சகிதம் அம்பாள் சித்திரை பூரணை நாளுக்கு முதல்நாள் உலா வருகிறார். சித்திரை திருவிழா நாட்களில் ஆண்கள், பெண்கள் அனைவரும் அங்கவலம் வந்தும், அடியளித்தும் துலா காவடி, தூக்குக்காவடி, பாற்காவடி, பறவைக்காவடி, ஆட்டக்காவடி, பாற்செம்பு, கற்பூரச்சட்டி என்பன எடுத்தும் நேர்த்தியை நிறைவுசெய்கின்றனர். வன்னிப் பகுதியில் பெருமளவு மக்கள் கூடும் சக்தி வழிபாட்டுத் தலமாக இப்பெருங்கோயில் திகழ்கின்றது.

1996ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது திருக்குடமுழுக்கு வேளை இராஜாளிகள் வட்டமாகப் பறந்து தேவ அங்கீகாரத்தையும் அம்பாளின் ஆசீர்வாதத்தையும் அடியவர் கூட்டத்திற்கு வழங்கிய அற்புதக்காட்சி நடைபெற்றுள்ளது.

நேற்றையதினம் கணபதி ஹோமத்துடன் ஆரம்பமான கிரியை நிகழ்வுகளில் எதிர்வரும் 29 ஆம் திகதி எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் 30 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரையான சுபவேளையில் அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்

திருக்குடமுழுக்கு காலத்தில் தினமும் அன்னதானம் நடைபெறும். அத்துடன் ஆலயம் சென்று வர பேருந்து சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அம்பாள் அடியவர்கள் அனைவரும் கலந்து அம்பாள் அருளை பெற்று நலம் பெறுங்கள். அம்பாளின் அருள் அவனியெல்லாம் ஆளும்.

**அறங்காவலர் சபை,**
**கனகாம்பிகை அம்பாள்**
**பெருங்கோவில்.**

## இவ்வருடத்திற்கான அபிவிருத்தி திட்டத்திற்கு 47.76 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

### யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கு,கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் (நெல்சிப்) கீழ், யாழ். மாநகர சபையின் இந்த வருடத்திற்கான அபிவிருத்தித் திட்டத்திற்கென 47.76 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் இந்த வருடத்திற்கான முதலாவது மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று முதல்வர் தலைமையில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக வங்கியிடமிருந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உள்ளூர் சேவைகள் மேம்பாட்டு திட்டத்திற்கான கடன் பெறப்பட்டுள்ளதுடன் இந்த திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபைக்குட்பட்ட செட்டியார் தோட்ட வீதிகள், ஜின்னா வீதி, அசாப் வீதி, சாதி அபுபக்கர் வீதி, ஐதுரிஸ் மக்கா வீதி, வி.டி.லேன் வீதிகள், மாவடி வீதி, கமால் வீதி,வைரவர் கோவில் கற்குளம் வீதி, பாரதி வீதியும் உப ஒழுங்கைகளும் ஸ்ரான்லி ஒழுங்கையும் பேரின்பநாயகம் வீதி போன்ற வீதிகளும் புனரமைப்பு செய்யப்படவுள்ளதோடு வடிகால்களும் மதகுகளும் திருத்தப்படவுள்ளன.

கடந்த 50 வருடங்களாக இவை புனரமைக்கப்படாத நிலையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## வடக்கு வாழ்மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்புவதே இன்றைய தேவை

### அமெரிக்க பிரதிநிதிகளிடம் சோமவன்ச எடுத்துரைப்பு

(கொழும்பு)

வடபகுதி மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கையின் போது செலவிடப்படும் நிதி அரசியல்வாதிகள் மற்றும் இடைத்தரகர்களின் ஊழல் மோசடிகளில் சிக்கிவிடாது தடுக்க நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவர் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது விவசாய அபிவிருத்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் ஐக்கிய அமெரிக்க குடியரசின் சர்வதேச அபிவிருத்திகளுக்கான பிரதிநிதிகள், தலைவர் சோமவன்ச அமரசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியபோதே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுக்களின் போது எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்கு வழங்கும் அபிவிருத்திக்கான நிதியை பயன்படுத்துவது தொடர்பாகவே அமெரிக்க பிரதிநிதிகள் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க,

வடபகுதி மக்களின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதே இன்றுள்ள முதன்மையான விடயமாகும். இதற்கு முதற்கட்டமாக வாவிகள் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களை புனர்நிர்மாணம் செய்ய வேண்டும். இதன்மூலம் விவசாயத் துறையை மேம்படுத்த முடியும்.

அத்தோடு முதலீடுகளின் பலாபலன்கள் நேரடியாக மக்களை சென்றடைய வேண்டும்.

அதைவிடுத்து அரசியல்வாதிகள் இடைத்தரகர்களின் ஊழல் மோசடிகளில் நிதிகள் சிக்கிவிடாமல் தடுக்க நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டும்.

வீண் விரயங்களை தடுப்பதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். 2014 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் இந்த ஆரம்பக்கட்ட விடயங்களை பூர்த்தி செய்வதை இலக்காக கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (அ-2)

## பேச்சுவார்த்தைகள் தொடர்பான புதிய தகவல் எதுவும் என்னிடமில்லை

### ரஜீவ விஜயசிங்க எம்.பி. கூறுகிறார்

அரசாங்கம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு. இடையிலான பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் தொடர்பில் புதிய தகவல்கள் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை.

எனினும்கடந்தஞாயிற்றுக்கிழமை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை சந்தித்த போது அவர் மிகவும் ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளியிட்டார் என்று ஆளும் கட்சியின் பேச்சுவார்த்தைக் குழுவின் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை குறித்து அரச பேச்சுவார்த்தை குழுவின் உறுப்பினர் என்ற வகையில் ரஜீவ விஜயசிங்கவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் இவ்விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதும் அரசாங்கத்தினதும் பிரதிநிதிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையின் எதிர்காலம் தொடர்பில் எவ்விதமான புதிய தகவல்களும் என்னிடம் இல்லை என்றே கூற வேண்டும்.

இனி எப்போது பேச்சுவார்த்தை நடக்கும் என்று எனக்கு தெரியவில்லை. இது தொடர்பில் அரசாங்கத் தரப்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் கூட்டமைப்பின் சார்பில இரா. சம்பந்தனிடமும் வினவவேண்டும்.

எனினும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நான் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை சந்தித்த போது அவர் மிகவும் ஆக்கபூர்வமான கருத்துக்களையே வெளியிட்டார். இது பேச்சுக்கள் தொடரும் என்ற நம்பிக்கையை என்னில் ஏற்படுத்தியுள்ளது.

எனவே எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கும் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று நம்புகின்றோம்.இது வெற்றி பெறும் என்பதே எனது நம்பிக்கை.

ஆனால் அதற்கு பேச்சுவார்த்தைகள் இடம்பெறவேண்டியது அவசியமாகும். எனினும் தற்போதைய நிலைமையில் பேச்சுவார்த்தை விடயத்தில் இரண்டு தரப்பினர் மத்தியிலும் எவ்வாறான நிலைமைகள் காணப்படுகின்றன என்று தெரியவில்லை. இதேவேளை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வெளிநாட்டுக்குப் பயணமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அடுத்த பாராளுமன்ற அமர்வு பெப்ரவரி மாதத்தின் இரண்டாம் வாரத்திலேயே நடைபெறும். அந்த வகையில் அடுத்த மாதத்தின் இரண்டாம் வாரத்திலேயே பேச்சுக்கள் நடைபெறும் சாத்தியமுள்ளது என்றார். (அ-2)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் கே. கண்ணதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. நற்குணலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)

# சீர்திருத்தம் எனும் பெயரில் அடிப்படைகளை அழிக்கலாகாது

## குடியரசு தினத்தையொட்டிய உரையில் பிரதீபா பட்டேல்

சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டும் எனக்கூறி ஜனநாயக அமைப்புகளின் அடித்தளத்தையே அழித்து விடக்கூடாது. அழுகிய பழங்களை கீழேவிழ வைக்கிறோம் எனக் கூறி மரத்தை உலுக்கி சாய்த்து விடக்கூடாது.

வளர்ச்சி பெற்ற நாடாக உருவாவதே நமது இலக்கு என குடியரசு தலைவர் பிரதீபா பட்டேல் தெரிவித்துள்ளார்.

குடியரசு தினத்தையொட்டி அவர் தொலைக்காட்சி ஊடாக நாட்டு மக்கள் அனைவருக்கும் நேற்று முன்தினம் உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில்,

63 ஆவது குடியரசு தினத்தையொட்டி நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கெள்கிறேன். நாம் சிக்கலான சவால் நிறைந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக் கிறோம்.



இந்த நிலையில் நமது கண்ணோட்டமும் இலக்குக ளும் தெளிவாகவே உள்ளன. வளர்ச்சி பெற்ற நாடாக நாம் உருவாகிட வேண்டும் என்பதை இலக்காக கொண்டுள்ளோம். நமக்கு பொருளாதார செழிப்பு மட்டுமே போதுமானது அல்ல. சம வாய்ப்பு, சம நீதி உள்ள இந்தியாவை உருவாக்க உள்ளோம். இந்தியக் கண்ணோட்டத்தின் பின்னணியில் ஓர் ஒற்றுமை உள்ளது.


அனைத்து எண்ணங்களிலும் செயல்களிலும் மனித நேயம் மேலோங்கி இருக்க வேண்டும் என்று நமது பண்பாடு இயம்புகிறது. இரக்க குணம், ஏனையவர்களை மதிப்பது, அவர்களை போற்றுவது போன்ற குணங்களை நமது பண்பாடு போதிக்கிறது. வறுமை, பசி சத்துணவின்மை, நோய்கள், கல்வியறிவின்மை ஆகியவற்றை ஒழிப்பதே நமது தலையாய கடமையாக இருக்க வேண்டும். நமது சமுதாயத்தில் காணப்படும் பெண்களுக்கு எதிரான சமூக உணர்வுகள் மாற்றப்பட வேண்டும்.

பொறுமை தியாகத்தின் அடிப்படையில் தான் நாடுகள் வளர்ச்சியடைகின்றன. இந்தியாவை போன்ற பெரிய தொரு நாட்டில் ஒருமித்த கருத்து மட்டுமே நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும். எனவே, அனைத்து பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும். ஜனநாயகத்தில் வன்முறைக்கு இடமே இருக்க முடியாது.

நாட்டின் அனைத்து அமைப்புகளும் ஒரே தேசிய குறிக்கோளுடன் பணியாற்றும் போது நல்ல தொரு சூழலை உருவாக்க முடியும்

நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்துவோம் என்ற குறிக்கோளுக்கு ஏற்றவாறு அனைவரும் ஒன்றுபட்டு ஒரே திசையில் பயணிப்போம் என்று தனது உரையில் கூறியுள்ளார். (அ-2)

# இந்தியா- தாய்லாந்து இடையே 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின



இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட 6 ஒப்பந்தங்களில் இந்தியாவும் தாய்லாந்தும் கடந்த புதன்கிழமை கையெழுத்திட்டன. குடியரசு தின சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தாய்லாந்து பிரதமர் யிங்லக் ஷினவத்ரா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இடையே பிரதிநிதிகள் குழு நிலையில் நடந்த பேச்சுவார்த்தைக்கு பின்னர் 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

பிற நாடுகளில் தண்டனை பெற்ற கைதிகளை அவர்களுடைய தாய் நாடுகளில் ஒப்படைப்பது, பாதுகாப்பு துறையில் ஒத்துழைப்பு, தாராள வர்த்தக மண்டலம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் ஒத்துழைப்பது, கலாசார பரிமாற்றம், இந்திய கலாசார உறவு மையம் மற்றும் சுலாலாங்கார்ன் பல்கலை இடையே புரிந்துணர்வு உடன்பாடு உள்ளிட்டவை இந்த ஒப்பந்தங்களில் அடங்கியுள்ளன.

இந்த உடன்பாடுகளில் கையெழுத்திடும் நிகழ்ச்சியையொட்டி பேசிய பிரதமர் மன்மோகன் சிங் இந்தியாவின் மதிப்பு மிகு கூட்டாளி என்றும் ஒட்டுறவு மிக்க நாடு என்றும் தாய்லாந்தை வெகுவாக பாாட்டிப் பேசினார்.

இரு நாட்டு மக்களும் நேருக்கு நேர் தொடர்பு கொள்ள வசதியாக இந்தியா, தாய்லாந்து அறக்கட்டளை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்திய ஷினவத்ரா நாளாந்த பல்கலைக்கழகத்தின் மறு நிர்மாணப் பணிகளுக்காக தாய்லாந்து ஒரு இலட்சம் டொலர்கள் வழங்கத் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

இதனிடையே இரு தரப்பு சார்பில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எந்த வடிவிலும் தீவிரவாதம் தலைதூக்க அனுமதிக்கக் கூடாது என்றும் அதற்காக பரஸ்பரம் ஒத்துழைப்பு நல்குவதாகவும் இரு நாட்டு தலைவர்களும் உறுதி அளித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. (அ-2)

# ஜப்பானிய வர்த்தகக்குழு ஜெயலலிதாவுடன் சந்திப்பு

(சென்னை)



ஜப்பானிய வர்த்தக குழுவினர் நேற்று முன்தினம் முதல்வர் ஜெயலலிதாவை சென்னை தலைமைச் செய லகத்தில் சந்தித்துப் பேசினர்.

இந்திய, ஜப்பானிய வர்த்தக ஒத்துழைப்புக் குழுவின் தலைவர் நோபுயா ஒகாஷி தலைமையிலான குழுவினர் முதல்வரை சந்தித்தபோது தமிழகத்தில் இந்நிய முதலீடுகள் பெருக அதிக வாய்ப்புள்ள சூழலை உருவாக்கியதற்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

ஜப்பானில் உள்ள பெருமளவு சிறிய நடுத்தர ரக தொழிலகங்கள் அதிக அளவில் முதலீடு செய்வதற்கான ஒரு மாநிலமாக தமிழகத்தைக் கருதுகின்றனர் என்றும் ஜப்பானிய வர்த்தகக்குழு இங்குள்ள தொழில் பேட்டைகளைக் கண்டதுடன் தொழில் அதிபர்களையும் சந்தித்துப் பேசி திருப்தி அடைந்ததாகவும் முதல்வரிடம் ஒகாஷி தெரிவித்தார்.

மேலும் ஜப்பானிய தொழில் முதலீட்டுக்கு உரிய ஆதரவை தமிழக முதல்வர் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த முதல்வர் தமிழகத்தில் சர்வதேச தரத்திற்கு ஈடாக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழக அரசு நோக்கமாகக் கொண்டு இருக்கிறது என்றும் ஜப்பானிய முதலீடுகளை தமிழகம் வரவேற்க தயாராயிருக்கிறது என்றும் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழக அரசு செய்யும் என்றும் உறுதி கூறினார். (அ-2)

## பாரதச் செய்தி

# மொழிப் போரில் அனைவரும் குதிப்போம்; கருணாநிதி ஆவேசம்

(சென்னை)

மொழிப்போரில் மொத்தத் தமிழர்களும் குதிப்போம். இறுதி இலக்கை எட்டுவோம் என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில்,

தமிழகத்தில் கடந்த 1930 களில் தமிழ் மொழியயைப் பின்னுக்கு தள்ளி இந்தி மொழி அடியெடுத்து வைத்தது. அப்போதே நான் இந்தியாவை எதிர்த்து போராடினேன்.

ஆனால், இன்றைக்கு எனக்கு வயது 88 என்றால் மொழிக்காக மாத்திரம் ஏறத்தாழ 74 ஆண்டுகள் போராடி வருகிறேன்.

சிறை சென்றோம். புழு போலத் துடித்தோம். சிறையிலேயே சித்திர வதைகளை அனுபவித்தோம்.

ஏனைய கட்சியினரும்இதனை கடமை என்று கருதி நம்முடன் இணைந்து போராட வேண்டும். இந்த ஒரு பிரச்சினையிலாவது அனைவரும் தமிழர்கள்.

திராவிட சமுதாயத்தில் பெரியாரால் வளர்க்கப்பட்டவர்கள் அண்ணாவின் வழி வந்தவர்கள் என்று நினைத்து மொழிப் போரில் மொத்த தமிழர்களும் குதிப்போம். இறுதி இலக்கை, இலட்சியத்தை நீச்சயம் அடைவோம்.

தமிழர்களை திராவிடர்கள் எனக் கூறிய போது அதை ஒப்புக் கொள்ள மாட்டோம் என்றார்கள்.

அப்படிச் சொல்பவர்கள் தயவு செய்து இந்தியாவின் தேசிய கீதத்தை கேட்க வேண்டும் அல்லது படித்து பார்க்க வேண்டும்.

எனவே, திராவிட தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வருங்காலத்தில் தேர்தலுக்கு முன்பு இருந்ததை விட இப்போது மக்களிடம் எழுச்சி காணப்படுகிறது. (அ-2)







இந்தியாவின் 63 ஆவது குடியரசு தினம் நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் ஆளுநர் ரோசய்யா தேசிய கொடியேற்றி வைப்பதையும் அருகில் தமிழக முதல்வர் ஜெயலலிதா நிற்பதையும் வீரதீரசெயல்கள் புரிந்தவர்களுக்கு தமிழக முதல்வர் சிறப்பு விருதினை வழங்கி கௌரவிப்பதையும் புதுடில்லியிலுள்ள ராஜ்காட்டில் உள்ள காந்தி சமாதிக்கு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தாய்லாந்து பிரதமர் யீங்லுக் ஷினவத்ரா மலரஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

## எகிப்தில்
# தாரிர் சதுக்கத்தில் திரண்ட மக்கள்
# இராணுவஆட்சி விலக கோரிக்கை



எகிப்தில் ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிரான புரட்சியின் முதலாவது ஆண்டு நிறைவை ஒட்டி புகழ் பெற்ற தாரிர் சதுக்கத்தில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர். அவர்களில் பலர், இராணுவ ஆட்சியில் உடனடியாக பதவி விலக வேண்டும் என கோஷமிட்டனர்.

எகிப்தில் கடந்தாண்டு ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக் பதவி விலகக் கோரி இதே ஜனவரி 25 ஆம் திகதி மக்கள் புரட்சி ஆரம்பமாகியது. அதற்கு முன் ஆங்காங்கே மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டாலும் தாரிர் சதுக்கத்தில் ஜனவரி 25ஆம் திகதி முதல் மக்கள் ஆயிரக் கணக்கில் திரள ஆரம்பித்தனர்.

ஓராண்டு கடந்த பின்னரும் கூட இன்றும் ஏமன், சிரியா, பஹ்ரைன் ஆகிய நாடுகளில் மக்கள் போராடிக் கொண்டுதான் உள்ளனர்.

இந்நிலையில் எகிப்து புரட்சியின் முதலாண்டு நிறைவைக் கொண்டாடும் விதத்தில் கடந்த 23 ஆம் திகதியே மக்கள் தாரிர் சதுக்கத்தில் திரள ஆரம்பித்தனர். நூற்றுக்கணக்கானோர் கூடாரம் அடித்துத் தங்கினர். நேற்று முன்தினம் காலையில் ஆயிரக்கணக்கில் திரண்ட மக்களால் அந்த சதுக்கம் தலைகளால் நிரம்பிய கடல் போன்று காட்சியளித்தது. தாரிர் சதுக்கத்தில் கூடிய மக்கள் எகிப்து புரட்சியைக் கொண்டாடிய போதும் இராணுவ ஆட்சியை எதிர்த்தும் கோஷமிட்டனர்.

புரட்சியின் முழு விளைவையும் மக்கள் அனுபவிக்க முடியாமல் போனதற்கு இராணுவ ஆட்சிதான் காரணம் என குற்றம் சாட்டினார்.

இராணுவ ஆட்சியை உடனடியாக பதவி இறக்காமல் இந்த புரட்சி ஓயப்போவதில்லை என அங்கு வந்திருந்த ஒருவர் ஆவேசத்துடன் தெரிவித்தார்.

முதலாண்டு நிறைவை ஒட்டி இராணுவ ஆட்சித் தலைவர் முகமது உசேன் டன்டாவி விடுத்த அறிக்கையில், 1967 ஆம் ஆண்டில் இருந்து நாட்டில் அமுலில் உள்ள அவசர நிலைச்சட்டம் நீக்கப்படுவதாகவும் அதேநேரம் கலவரத்தில் மக்கள் ஈடுபட்டால் அச்சட்டம் முன்னறிவிப்பின்றி அமுலுக்கு வரும் எனவும் தெரிவித்தார். (அ-2)

# இஸ்ரேல்-பாலஸ்தீன ஒருமைப்பாட்டிற்காக பான் கீ மூன் மத்திய கிழக்கிற்கு பயணம்

(வோஷிங்டன்)

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன நாடுகளிடையேயான பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் பான் கீ மூன் அடுத்த வாரம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.


இது குறித்து அவர் கூறியதாவது,

தனது சுற்றுப்பயணத்தின் மூலம் இருநாடுகளிடையே உள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என நம்பிக்கை தெரிவித்தார். மேலும் இம்மாதத்தில் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன அதிகாரிகள் இடையேயான பேச்சுவார்த்தை ஜோர்தான் தலைநகர் அம்மானில் நடைபெறும் எனவும் தெரிவித்தார். தொடர்ந்து எகிப்தில் நடைபெற்ற புரட்சியின் முதல் ஆண்டு நினைவு தினத்திற்கும் வாழ்த்துத் தெரிவித்தார். (அ-2)

## உலக தரிசனம்

# அமெரிக்காவில் உருவாகும் பணிகளை வெளிநாடுகளுக்கு கொடுக்கமாட்டோம்

## ஒபாமாவின் முடிவால் இந்தியாவிற்கு பாதிப்பு



அமெரிக்காவில் உருவாகும் பணிகளை வெளிநாடுகளுக்கு வழங்கமாட்டோம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறினார். இதனால் இந்திய நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டு இருக்கிறது.

அமெரிக்க பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஒபாமா புதிய பொருளாதார திட்டத்தை தாக்கல் செய்து உரையாற்றினார். அவரது உரை அமெரிக்கா முழுவதும் நேரடியாக தொலைக்காட்சியில் ஒளி பரப்பரப்பட்டது. அவர் உரை நிகழ்த்துகையில்,

சர்வதேச அளவில் அமெரிக்காவின் செல்வாக்கு குறையவில்லை. உலக அளவில் அமெரிக்கா முக்கியமான நாடாக விளங்குகின்றது. மிகச் சிறந்த இராணுவத்தை நாம் கொண்டு இருக்கின்றோம். மேலும் புதிய பாதுகாப்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்த இருக்கின்றோம்.

அமெரிக்காவில் உருவாகும் பணிகளை வெளிநாடுகளுக்கு கொடுக்கமாட்டோம். இதனால் நமது பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படுவதை அனுமதிக்க முடியாது. ஏனைய நாடுகளை சார்ந்து இருக்க அமெரிக்கா விரும்பவில்லை. அமெரிக்காவின் பணிகளை வெளிநாடுகளுக்கு வழங்குவதை நிறுத்தும் நேரம் வந்து விட்டது.

நம்நாட்டு வேலைகளை நம் நாட்டை சேர்ந்தவர்களை கொண்டு முடிக்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு சலுகைகள் அளிக்கப்படும். இதற்காக அமெரிக்க நிறுவனங்கள் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டும்.

உலக நாடுகளின் தலைவர் அமெரிக்காதான். உலக நாடுகளில் தவிர்க்க முடியாத நாடும் அமெரிக்காதான். ஜனாதிபதி பொறுப்பில் நான் இருக்கும் வரை இந்த நிலை மாறிட அனுமதிக்கமாட்டேன். இதற்குத் தடை ஏற்பட்டால் அதை எதிர்த்து போராடுவேன்.

இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார். (அ-2)

# புத்தாண்டு கொண்டாட்ட வெடிவிபத்தில் 4 பேர் பலி; 90 பேர் படுகாயம்- தாய்லாந்தில் சம்பவம்



தாய்லாந்து நாட்டில் புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது வாண வேடிக்கைகளில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக 4 பேர் உயிரிழந்தனர். 90 பேர் காயமடைந்தனர். தலைநகர் பாங்கொங்கில் இருந்து 100 கி.மீ தொலைவில் உள்ள சுபான் புரி எனும் இடத்தில் பயன்படுத்தப்படாத வாண வேடிக்கைகக்கான ரொக்கெட் குவியலின் மீது தீப்பொறி விழுந்ததில் இந்த விபத்து ஏற்பட்டது.

காதைப் பிளக்கும் ஓசையும் தீப்பிளம்பும் கிளம்பியதில் அந்தப் பிராந்தியமே புகை மண்டலமாக காட்சியளித்தது. இந்த விபத்தில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாயின. இவர்களுக்கு அரசு கூடாரங்களை அமைத்துக் கொடுத்துள்ளது.

இதில் தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் பன்ஹார்ன் சில்ப- அர்ச்சா ஆகியோரும் காயமடைந்ததாக தெரிகிறது. தாய்லாந்தில் மிகப் பெருமளவில் சீனர்கள் வாழ்வது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பாலஸ்தீன- இஸ்ரேல் பிரச்சினையை தீர்க்க இஸ்ரேல் ஏற்படுத்தும் குடியேற்றங்களை நிறுத்துக

## இந்தியா கோரிக்கை

(நியூயோர்க்)

பாலஸ்தீன எல்லையில் இஸ்ரேல் தனது குடியேற்றங்களை ஏற்படுத்தி வருவது அப்பிரச்சினையை தீர்க்க சர்வதேச சமூகம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு வேட்டு வைக்கும்.

அதனால் இஸ்ரேல் தனது குடியேற்றங்களை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேல்-பாலஸ்தீன பிரச்சினை நீடித்து வருகிறது. அதில் பாலஸ்தீன எல்லைப்பகுதிகளில் இஸ்ரேல் தனது நாட்டவர் குடியேறுவதற்காக புதிய குடியேற்றங்களை அமைத்து வருகிறது.

இது பாலஸ்தீனத்தின் இறையாண்மையை மீறிய செயல் என சர்வதேச சமூகத்தால் கண்டிக்கப்பட்டும் இஸ்ரேல் நிறுத்தவில்லை.

இது குறித்து நேற்று முன்தினம் ஐ.நா பாதுகாப்புக் குழுவில் நடந்த விவாதத்தின் போது உரையாற்றிய இந்தியத் தூதர் ஹர்தீப் சிங் புரி கூறியதாவது,

பாலஸ்தீன மண்ணில் புதிய குடியேற்றங்களே இஸ்ரேல் உருவாக்குவது இரு நாடுகள் தீர்வுக்கு வேட்டு வைக்கும்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஐ.நா மற்றும் ரஷ்யா தூதர்கள் முயன்று வருகின்றனர்

இந்தாண்டின் இறுதிக்குள் இதற்கான ஓர் ஒப்பந்தத்தை அந்த தூதர்கள் உருவாக்குவதற்கு வசதியாக தனது புதிய குடியேற்றங்களை இஸ்ரேல் முழுமையாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

சர்வதேச சட்டப்படி இந்த குடியேற்றங்கள் சட்டவிரோதமானவை. ஐ.நா வில் உறுப்பினர் ஆவதற்கு பாலஸ்தீனத்திற்கு அனைத்துத் தகுதிகளும் இருக்கின்றன என்பதை இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது என அவர் தெரிவித்தார். (அ-2)

# பாதுகாப்புப்படை, தலிபான்கள் மோதல்; 23 பேர் பலி- பாகிஸ்தானில் சம்பவம்

பாகிஸ்தானில் பாதுகாப்பு படையினருக்கும் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானில் வடமேற்குப் பகுதியில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதியான குர்ரம் பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடைபெற்றது.

இதில் 6 பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டனர். பயங்கரவாதிகள் தரப்பில் 17 பேர் பலியாகியுள்ளனர்.

குர்ரம் பகுதியில் தேடுதல் வேட்டையில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டிருந்த போது அங்கு மறைந்திருந்த 50 இற்கு மேற்பட்ட பயங்கரவாதிகள் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு நடத்தியதை அடுத்து இருதரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. (அ-2)



பஹ்ரைனில் அரசுக்கு எதிராக மீண்டும் போராட்டங்கள் தீவிரம் அடையத் தொடங்கியுள்ளன. இதையடுத்து கடந்த 25 ஆம் திகதியன்று பல கிராமங்களில் இருந்து மக்கள் திரண்டு வீதியில் மறியல் போராட்டத்தில் குதித்தனர். இவர்களை பொலிஸ் அதிகாரிகள் கலைத்து விரட்டுவதைப் படங்களில் காணலாம்.

வீரம் நம் உடம்பின் ஆற்றல் அல்ல.
அது, நம் உள்ளத்தின் பண்பு. ~ *மகாத்மா காந்தி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சமூக விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்

யுத்தத்தின் பின்பான வாழ்வியல் என்பது சிக்கல் நிறைந்துள்ளதாக இருந்துள்ளதை உலக வரலாற்றில் இருந்து அறிய முடியும்.

இந்த வரலாற்று உண்மைகள் எங்கள் மண்ணுக்கு பொருத்துடையதாக இருப்பதை மறுப்பதற்கில்லை.

யுத்தத்தின் பின்பான வாழ்வியல் சிக்கல் நிறைந்ததாக, இடர்பாடு மிகுந்ததாக இருக்கின்ற வேளையில், அதில் இருந்தான மீட்சி என்பதைப் பொறுத்தே அபிவிருத்தி என்பதன் நிலைபேறு தங்கியுள்ளது.

உலக யுத்தத்தில் மிகப் பெரும் அழிவை சந்தித்த ஜப்பானின் எழுச்சி என்பது, அங்கு நடந்த ஒழுங்குபடுத்தலும் மக்களின் மனவுறுதியும் இணைந்த வலிமையில் ஏற்பட்டதாகும்.

அதேபோன்றுதான் யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து எழுச்சி பெற்ற நாடுகளின் நிலைமையும் உள்ளது.

எனவே எங்கள் வடபுலத்திலும் யுத்த நிலைமைகள் ஏற்படுத்திய அழிவுகள், இழப்புகளின் மத்தியில் தொடர்கின்ற கலாசார பிறழ்வுகள், குடும்ப முறிவுகள், தங்கி வாழ்வோரின் பரிதாப நிலைமைகள், தலைவனைப் பறிகொடுத்த குடும்பங்களின் துயரங்கள் என்பன எங்கள் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கிவிடும் என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

இங்குதான் பொறுப்புடன் கூடிய சமூக சிந்தனை தேவைப்படுகின்றது.

சமூக சிந்தனை என்பது அரச அமைப்புக்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் எனப் பட்டிதொட்டியெங்கும் பரவி எழவேண்டும்.

அப்போதுதான் போருக்குப் பின்பான அபிவிருத்தி, இனத்துவ எழுச்சி, அறிவு பிரவாகம் என்பன சாத்தியமாகும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக போருக்குப் பின்பான எங்கள் வாழ்வியல் இழப்புகள் குறித்து நாம் அக்கறையற்றவர்களாக இருந்துவிட்டோம் என்றே கூறவேண்டும்.

வீதியைத் திருத்த வேண்டும், பாலத்தைக் கட்டவேண்டும். புகையிரதப் பாதையை மீள அமைக்க வேண்டும் என்ற கீழ் கட்டுமானம் பற்றி சிந்தித்த அளவிற்கு சமூக குடும்ப உறவு, கலாசாரப் பேணுகை, கூட்டுக் குடும்பத்தின் அவசியம்.

பண்டிகைகளின் அனுஷ்டிப்பு, பெரியவர்களைக் கனம் பண்ணும் பண்பு என்பது தொடர்பில் நாம் அக்கறையற்றவர்களாக இருந்துள்ளோம்– இருக்கின்றோம் என்ற செய்தி வேதனைக்குரியதே.

இன்று எமது சமூகத்தில் நடக்கக்கூடிய கடத்தல்கள், பழிவாங்கல் படலங்கள், காழ்ப்புணர்வுகள், நன்றி மறப்புகள் என்பன தலைவிரித்தாடுவதற்கும் குடும்ப அமைப்புகள் குலைவுற்றுப் போவதற்கும் சமூக விழிப்புணர்வு இன்மையே அடிப்படைக் காரணமாகும்.

ஆகவே, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் இனம் மீட்சியும் எழுச்சியும் பெறவேண்டுமாயின், மக்கள் மத்தியில் நம்பிக்கையும் அறிவுத் தேடலுக்கான வழிகாட்டல்களும், சமூக நெருக்கங்களையும் கட்டி வளர்ப்பதற்கான முயற்சிகளும் தேவை.

அதிலும் குறிப்பாக குடும்ப உறவுகள், பிள்ளைகள் மீதான பெற்றோரின் கண்காணிப்புகள் என்பன கவனத்தில் கொள்ளப்படுவது கட்டாயமானதாகும்.

இது தொடர்பில் சமூக விழிப்புக் குழுக்களை உருவாக்க வேண்டும்.

அதிலும் இளைஞர்கள் அடங்கிய குழுமங்கள் உருவாகும்போது அவர்களின் வழிகாட்டல்கள் நேர்மையானதாகவும் யதார்த்தத்துடன் பொருந்துவதாகவும், தூய சிந்தனை கொண்டதாகவும் இருக்கும்.

எனவே,போருக்குப் பின்பான எமது அபிவிருத்தி நோக்கிய பாதையில் பயணிப்பதற்கு தேவையான வழிகாட்டல்களை ஏற்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

# அபிவிருத்திக்கான சமூக அமைப்பின் மாதாந்த ஆய்வரங்கம்

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு கற்றோர் சமூகத்தில் சிந்தனையை தூண்டவும் அபிவிருத்தியில் அவர்கள் பங்களிப்பை பெறும் பொருட்டும் காலத்தின் தேவைகருதி மாவட்டம் தழுவிய பொதுப் பிரச்சினைகளை மாதாந்த ஆய்வரங்காக நடத்தி வருகின்றது.

இந்நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் யாழ்ப்பாணம் 60, அரசடி வீதி, சொண்ட் அலுவலத்தில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் ஓய்வுபெற்றவடமாகாண சபை பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜா **மாறிவரும் இன்றைய சூழலில் உள்ள ஞராட்சி மன்றங்களின் பொறுப்புக்கள்** எனும் கருப்பொருளில் ஆய்வுரையினை நிகழ்த்தவுள்ளார். (அ)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பாடசாலை நலனில் அக்கறை கொண்ட பெற்றோர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் திருமதி கி.முத்துகுமாரன் கேட்டுள்ளார். (அ)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## படுக்கையை விட்டு எழும்போது ஜெபம் சொல்லி எழுவது எதற்கு?

நித்திரைதேவியின் அருள்வேண்டும் என விரும்பாத உயிரினங்கள் உள்ளதாக நாம் கேள்விப்பட்டதில்லை. அன்றாட உலக வாழ்க்கையின் இன்னல்களிலிருந்து விடுபட்டு ஒருநபர் ஆத்மாவுக்குள் ஒதுங்குவதே நித்திரை என்று ஆசாரியர்கள் விளக்கம் கூறியுள்ளனர்.

தூக்கத்தை இழந்தவர்களைப் பொதுவாக துர்ப்பாக்கியசாலிகள் என்று அழைப்பதுண்டு. அதிர்ஷ்டசாலிகள் நித்திரையின் ஆழத்தில் மூழ்கி எல்லாம் மறந்து தூங்குகின்றனர். உணவும் தூக்கமும் ஒன்றோடொன்று இணைந்தது என்பது நமது உறுதியான நம்பிக்கை.

தூக்கத்தைக்குறித்து மட்டுமல்ல நமக்கு தூங்கி எழுவதற்கும் சில விதிமுறைகள் உண்டு என்பதை உணரலாம்.

தூக்கதத்தின் பிடியை விட்டு உதயத்துக்கு முன் ஒன்றரை நாழிகை விடியலில் பிரம்மமுகூர்த்தத்தில் எழுந்து தினசரி அலுவல்களில் ஈடுபடவேண்டும் என்று ஆசாரியர்கள் கூறியுள்ளனர்.இந்த வேளையில் தூங்கினால் உடல் நிலை குன்றும் என்றும் சோர்வும் தரித்திரமும் உருவாகும் என்றும் நம்பிக்கை நிலவுகின்றது.அதனால் பிரம்மமுகூர்த்தத்தில் விழித்து வலது பக்கம் திரும்பி எழ வேண்டும்.விழித்த உடன் படுக்கையிலிருந்து குதித்தெழுந்து ஓடுவது தவறு.

விழித்த உடன் இருகைகளையும் மலர விரித்து அதைபார்த்து இலட்சுமி, சரஸ்வதி, கௌரி என்ற தேவிமாரை தரிசித்து மந்திரம் சொல்ல வேண்டும்.

**கராக் ரேவாசதேலட்சுமி கரமத்யே சரஸ்வதி**
**கரமூலே ஸ்திதா கௌரி பிரபாதே கரதர்சனம்**

தூக்கம் நீடித்திருக்கும் போது மனிதனின் இரத்த ஓட்டத்துக்காக இதயம் மிகக்குறைவான சக்தியே பயன்படுத்துகின்றது.திடீரென குதித்தெழுந்து செல்லும் போது இருதயம் மிகக் கடினமாகச் செயற்பட வேண்டிய நிலை உருவாகின்றது.இது இதயத்துடிப்பை அதிகரித்து நிலைதடுமாறச் செய்கின்றது.அதனால் படுக்கையை விட்டு எழும்பியிருந்து சிறிது நேரம் பதிந்த குரலில் மந்திரங்கள் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் கற்பித்துள்ளனர்.இது நம் இரத்த ஓட்டத்தை நிலைநிறுத்துவதற்காகவே என்று விஞ்ஞானம் கூறுகின்றது.

அது மட்டுமல்ல இருதய நோயாளிகளில் இருபத்துமூன்று சதவீதமும் படுக்கையிலிருந்து எழும்பும் போது நிகழ்ந்த விபத்தினால் நோயுற்றனர் என்பது புள்ளி விபரம்.

# வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

56

இன்பவாழ்க்கை என்னும் போது காமத்தை அனுபவிக்கும் வாழ்வு என்ற எண்ணம் பலரிடையே உண்டு. உடல் சார்ந்த இன்பமாகவும் அது இருப்பதால் இந்த எண்ணம் தோன்றி நிலைபற்றுள்ளது.மணிவாசகர் அன்று பாடிய பாடல்களில் காமவாழ்க்கை பற்றிய குறிப்புக்கள் நேரிடையாகவும் குறிப்பாகவும் இடம்பெற்றுள்ளன. மந்திரியாக வாழ்ந்த அவர் காமம் பற்றிக் குறிப்பிடுவது சிந்தனைக்குரியது. வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டிய இன்பங்களில் காம இன்பமும் ஒன்றாக இருப்பதால் அவர் அதைக் குறிப்பிட்டு உள்ளார் எனலாம். மேலும் அவருக்கு காம இன்பத்திலே நாட்டம் இருந்ததையும் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

காம உணர்வு எல்லாவற்றையும் மறக்க வைத்து விடும். மெய்யடியார்கள் எல்லோரும் இறைவனடி சேரத் தான் மட்டும் உலகிலே வாழ்வதற்குக் காமவயப்பட்டமையே காரணமென் கிறார் மணிவாசகர்.அதனால்தான் உலக வாழ்க்கையில் அழுந்திக் கிடப்பதாகப் பாடியுள்ளார்.

தனது புலனடக்கமில்லாத தன்மையை வெளிப்படையாக எடுத்துக் கூறும் அவர் மனம் பக்குவமடையத் தொடங்கிவிட்டதை உணர்த்துகிறார். அதனால் புழுக்கூடாகிய உடம்பைக் காத்திருக்கும் வாழ்வு தமக்குக் கிடைத்ததெனக் கூறியுள்ளார்.

இறைவன் தன்னை நாடிவரும் அடியார்கள் அனைவரையும் சோரம் போகாமல் பற்றிக் கொள்ளும் தன்மையுடையவன்.அந்த இறையருளைப் பெறத் தான் தவறிவிட்டதை மணிவாசகர் எண்ணிப் பார்த்துள்ளார்.இறுதியில் காரணத்தையும் தெளிவாக உணர்ந்து பாடலில் அதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஒருத்தியின் வாயிதழ் துடித்தவிதமும் அவள் அணிந்திருந்த ஆடை சிறிது வழுவிய விதமும் முகத் திலே சிறிய வியர்வை அரும்பிய வித மும் என்னைக் கேடு செய்யத் தூண்டின என்கிறார். மனம் புலன் வழிச்செல்ல அறிவு மயங்கி வாழ்வு நடத்தியதை ஒப்புக் கொள்கிறார். இக்கருத்தினை உரையாளர் வருமாறு கூறுவார்.


மணிவாசகர் பாடலிலே இவை உணர்ந்து என்றது பிரார்த்த வினையுடன் உலகில் வாழ்ந்திருந்து வினைப் பயன்களை அனுபவிக்கும் போது கடவுள் தியானம் இடையீடுபடுதலான் மாயையின் ஆற்றல்கள் புலப்படுதல் பற்றியதாகும்.இறைவன் அருள்வழிபட்டோர் இவ்வுலகிலே வாழுங்காலத்து மாயையின் சக்தியினால் தாக்குண்டு கேடடைவார் என்பதனையே அடிகள் கூறியுள்ளார்.

பெண்வழிச் சேரல் பற்றி வள்ளுவரும் பல கருத்துக்களைக் கூறியுள்ளார்.பெண்களின் அழகில் மயங்கி நிற்பதையே உரையாளர் மாயை எனக் குறிப்பாகச் சொல்லுவர். ஆனால் இக்காம வயப்பட்டுத் தவறிழைக்கும் பண்பு இவ்வுலகில் ஆண்களிடையே பலகாலமாகவே உள்ளதொரு செயற்பாடாகும்.அதனையே மணிவாசகர் சீர்மை செய்ய முயன்றார். தனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் அவலத்தையும் வெளிப்படையாகக் கூறி எல்லோரையும் நன்நெறிப்படுத்த எண்ணியுள்ளார். காமவயப்பட்வரை நல்வழிப்படுத்த பக்திநெறியில் ஆற்றுப்படுத்துவதே தக்கது. உலகத்து துன்பங்களுக்கெல்லாம் காரணமான காமமயக்கத்தை மானிடர் கைவிடவே வழிகாட்டியுள்ளார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

*முடித்தவாறும் என்தனக்கே தக்கதே அடியாரைப்*
*பிடித்தவாறும் சேராமல் சேரனேன் இங்கொருத்திவாய்*
*துடித்தவாறும் துகிலிறையே சோர்ந்தவாறும் முகங்குறுவேர்*
*பொடித்த வாறும் இவையுணர்ந்து கேடுஎன தனக்கே சூழ்ந்தேனே.*

# ரெஜிஸ்ட்ரி கிளீனர்கள்



விண்டோஸ் இயக்கத்தில் மால்வெயர் மற்றும் வைரஸ் களுக்கு அடுத்தபடியாக ரெஜிஸ்ட்ரி தான் விண்டோவில் பலவீனமான ஒரு இடமாகும். இவற்றினால் விண்டோஸ் முடக்கப்படலாம். மெதுவாக இயங்கலாம் அல்லது பிரச்சி னைக்குரியதாகலாம்.

ரெஜிஸ்ட்ரியில் தான் அனைத்து புரோகிராம்களின் இன்ஸ்டலேஷன் மற்றும் அவற்றின் இயக்கம் குறித்த வரிகள் எழுதப்படுகின்றன. ஒரு புரோகிராமினை இன்ஸ் டோல் செய்திடுகையில் இவை எழுதப்படும். ஆனால், அந்த புரோகிராமினை, கணனியிலிருந்து நீக்குகையில், ரெஜிஸ் ட்ரியில் எழுதப்பட்ட பல வரிகள் தங்கி விடுகின்றன.

இவை விண்டோஸ் இயக்கத்தின் வேகத்தினை மந்தப் படுத்துகின்றன. எனவேதான், விண்டோஸ் மெதுவாக இயங் கினால் ரெஜிஸ்ட்ரியை முழுமையாக சுத்தப்படுத்துங்கள், தேவையற்ற வரிகளை நீக்குங்கள் என நமக்கு அறிவுரை கள் வழங்கப்படுகின்றன.

ஆனால், ரெஜிஸ்ட்ரியின் வரிகளை நீக்குவது அவ்வளவு எளிதான செயல் அல்ல. நீக்கக் கூடாத வரிகளை, நீக்கிவிட் டால் விண்டோஸ் தொடர்ந்து செயற்படுவது அல்லது சில புரோகிராம்கள் முழுமையாகச் செயற்படுவது அல்லது சில புரோக்கிராம்களை முழுமையாக செயற்படுவது சிக்கலாகி விடும். இதனால் தான் பல புரோகிராம்கள் இதற்கென்றே தயாரிக்கப்பட்டு இணையத்தில் தரப்பட்டுள்ளன.

சில புரோகிராம்கள் மற்ற பயன்பாட்டுடன் ரெஜிஸ்ட்ரி சுத்தப்படுத்தும் பயன்பாட்டினையும் சேர்த்துத் தருகின்றன. பெரும்பாலான புரோகிராம்கள் இலவசமாகவே இணையத் தில் கிடைக்கின்றன. இவற்றில் எளியதாகவும் அதிக பயனுள் ளதாகவும் திறன் கொண்ட ஐந்து புரோகிராம்கள் இங்கு பட்டியலிடப்பட்டுத் தரப்படுகின்றன.

**❋ சிகிளீனர் (CCleaner):**

ரெஜிஸ்ட்ரி சுத்தப்படுத்தும் புரோகிராம்களில் மிகச் சிறப்பான இடம் கொண்டுள்ள புரோகிராம் சிகிளீனர் ஆகும். இதனைப் பயன்படுத்தியதால் சிஸ்டம் பிரச்சினைக்குள்ளா கியது என்ற சொல்லை இந்த புரோகிராம் பெற்றதில்லை. இதன் இன்னொரு சிறப்பு என்னவென்றால் இதில் உள்ள ரெஜிஸ்ட்ரி கிளீனரைப் பயன்படுத்தும் முன்னர் ரெஜிஸ்ட்ரி பைலுக்கு ஒரு பேக் அப் எடுத்துக் கொள்ளும்படி இது அறி வுரை தரும். மேலும் சிகிளீனர் மிக நுணுக்கமாக ரெஜிஸ்ட்ரி பைலை ஆய்வு செய்து வரிகளை நீக்காது. தெளிவாக தேவையற்ற வரிகள் என்று தெரிந்தாலே அவற்றை நீக்கும். எனவே, இதனால் பிரச்சினை ஏற்படாதுள்ளது.

**கொமோடோ சிஸ்டம் யுடிலிட்டீஸ் (Comodo System Utilities)**

ரெஜிஸ்ட்ரி கிளீனிங் மட்டுமன்றி மற்ற வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு புரோகிராம் இது. இதனை Http- www. comodo.com/home/support- maintenance / system- utilities என்ற முகவரியில் உள்ள இணைய தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இது சிகிளீனரைக் காட்டிலும் இன்னும் ஆழமாகச் சென்று நுணுக்கமான முறையில் இடம்பிடித்த தேவையற்ற வரிகளைக் கண்டறிந்து நீக்குகின் றது. இதனை ஒருமுறை பயன்படுத்தினால் அதன்பின் கணனி இயங்கும் வேகத்தினைக் கொண்டு இந்த புரோகிரா மின் ரெஜிஸ்ட்ரி கிளீனிங் திறனை அறிந்து கொள்ளலாம்.

**❋ ட்வீக் நவ்ரெக் கிளீனர் (TWeak Now Reg Cleaner)**

கொமோடோ அளவிற்கு நுண்ணியமாக வரிகளைக் கண்டறியாவிட்டாலும் ட்வீக் நவ் ரெக் கிளினர் மிக வேகமாக ரெஜிஸ்ட்ரியைச் சுத்தப்படுத்தும் எனப் பெயர் பெற்றதாகும். வேகம் ஒன்று மட்டும் உங்கள் விருப்பம் எனில் இந்த ரெஜிஸ் ட்ரி கிளீனரைப் பயன்படுத்தலாம். விண்டோஸ் இயக்கத்தில் ஏற்படுத்தப்படும் தற்காலிக பைல்கள் இணைய உலாவில் உருவாக்கப்படும் பைல்கள் குக்கீஸ் குரோம் மற்றும் பயர்பொ க்ஸ் பிரவுசர்களின் டேட்டா பைல்கள் என அனைத்தையும் சுத்தப்படுத்துவதுடன் விண்டோஸ் செட்டிங்ஸ் அமைப் பையும் சரி செய்கிறது. அத்துடன் நெட்வேர்க் செட்டிங்ஸ் சரியாக இல்லை எனில் அதனையும் சரி செய்கிறது.

இதனைப் பெற http://www.tweaknow.com/ Reg Clea ner. php என்ற முகவரியில் உள்ள இணையத்தளம் செல்லவும்.

**❋ வைரஸ் ரெஜிஸ்ட்ரி கிளீனர் (Wise Registry Cleaner)**

ரெஜிஸ்ட்ரி கிளீனிங் சரியா மேற்கொள்ளப்படாவிட்டால் சில வேளைகளில் விண்டோஸ் முடங்கும் நிலை உருவாகும். அதனால் தான் ஏற்கனவே உள்ள ரெஜிஸ்ட்ரியை பக் அப் எடுத்து வைத்துக் கொள்ள அறிவுரை தரப்படுகின்றது. ரெஜிஸ்ட்ரி கிளீன் செய்த பின்னர் அது சரியாக இயங்கா விட்டால் பக் அப் செய்த பைலை மீண்டும் அமைத்து இயக்கலாம். பலர் இதனை மேற்கொள்வதில்லை. இந்த வைரஸ் ரெஜிஸ்ட்ரி கிளீனர் இதனை மிக எளிதான ஒரு வழி மூலம் நமக்கு உதவிடுகின்றது. இதில் உள்ள பட்டன் ஒன் றின் மீது கிளிக் செய்வதன் மூலம் முந்தைய ரெஜிஸ்ட்ரி பைலை மீண்டும் கொண்டு வந்து சரி செய்கின்றது. இந்த புரோகிராமினைப் பெற http://www.wisecleaner.com/ wisergistry cleanerfree.html என்ற முகவரியில் உள்ள இணைய தளத்திற்குச் செல்லவும்.

**❋ ஏ.எம்.எல்.ரெஜிஸ்ட்ரி கிளீனர் (AML Registry Cleaner)**

அதிக திறனும் பல்முனைப் பயன்பாடும் கொண்டது ஏ.எம். எல். ரெஜிஸ்ட்ரி கிளீனர். நிறைய கூடுதல் வசதிகள் தரப்பட் டுள்ளன. சொல் கொடுத்து தேடி அறியும் வசதி, நாமாக குப்பை பைல்களை அழிக்கும் வசதி, விண்டோஸ் தொடங்குகையில் இயங்கும் அனைத்து பைல்களையும் காணும் வசதி எனப் பலவகை வசதிகளை தருகிறது. ஏனைய கிளீனர்களில் இருப்பதை காட்டிலும் பல செயற்பாடுகளை தருவதால் நிறைய பட்டன்கள் இதில் தரப்பட்டிருப்பதனைக் காணலாம்.

ஆனால், இதனாலேயே அதனைப் பயன்படுத்துபவர்கள் ரெஜிஸ்ட்ரி குறியீடுகளை பிரித்து விடுகின்றனர். எனவே ரெஜிஸ்ட்ரி பக் அப் செய்த பின்னர் அதனைப் பயன்படுத்து வது நல்லது. இந்த புரோகிராமை பெற http://www.amltools. com/ என்ற முகவரியில் உள்ள இணைய தளம் செல்லவும்.

இன்னும் நிறைய ரெஜிஸ்ட்ரி கிளீனர்கள் இணையத்தில் கிடைக்கின்றன. ஆனால் மேலே குறப்பட்ட கிளீனர்கள் அனைத்தும் பல வசதிகளை கொண்டவையாக உள்ளன. நீங்களும் பயன்படுத்திப் பார்க்கலாம்.

# இன்னும் 3 வருடங்களில் விண்டோஸ்!



விண்டோஸ் கையடக்க தொலைபேசிகளானது இன்னும் 3 வருடங்களில் அப்பிளின் ஐ போனை முந்துமெனவும் அதிகம் விற்பனையாகும். கையடக்க தொலைபேசிகளின் வரிசையில் இரண்டாவது இடத்தினை பெறுமெனவும் ஐ சப்ளை என்ற சந்தை ஆராய்ச்சி நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

இவ்வரிசையில் அண்ட்ரோய்ட் முதல் இடத்தினைப் பெறு மெனவும் ஐ சப்பிளை தெரிவிக்கின்றது. விண்டோஸின் இவ்வளர் ச்சிக்கு நோக்கியா பிரதான பங்கு வகிக்குமெனவும் அந்நிறுவ னம் குறிப்பிடுகின்றது. இம் மாதம் நடைபெற்ற பாவனையாளர் இலத்திரனியல் மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட நோக்கியா லூமியா 900 கையடக்க தொலைபேசியானது பலரினது கவனத்தினையும் ஈர்த்திருந்தது.

விண்டோஸ் மூலம் இயங்கும் இக்கையடக்க தொலை பேசி யானது நோக்கியா மைக்ரோசொப்ட் கூட்டணியில் வெளியாகிய 3 ஆவது கையடக்க தொலைபேசியாகும். இதற்கு முன்னர் வெளியாகிய நோக்கியா 800, 710 ஆகிய கையடக்க தொலை பேசிகள் பெரிதாக பாவனையாளர்களை கவரவில்லை. ஆனாலும் லூமியா 900 இன் அறிமுகமானது அனைவரது கவனத்தினையும் ஈர்த்துள்ளது. இம் மாதிரியானது பாவனையா ளர்களின் நோக்கியாவுக்கு மட்டுமன்றி விண்டோஸிற்கு பெரிய திருப்பு முனையாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் விண்டோஸ் கையடக்க தொலைபேசிகளின் உலகளாவிய சந்தைப்பங்கு வெறும் 2% ஆகும்.எனினும் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டளவில் இது 16.7 ஆக உயரும் என ஐ சப்ளை எதிர்வுகூறியுள்ளது.மேற்காட்டப்பட்டுள்ளவாறு அண்ட்ரோய்ட் 2015 ஆம் ஆண்டளவில் 58.1% சந்தைப் பங் கைப்பெறுமெனவும் அப்பிளின் ஐஓஎஸ் அதாவது ஐ போன் கள்16.6% பங்கை மட்டுமே பெற்று 3 ஆவது இடத்திற்கு வீழ்ச்சியடையுமெனவும் ஐ சப்ளை தெரிவிக்கின்றது.

நோக்கியா தனது அமெரிக்கச் சந்தையின் மீது அதிக அக்கறை கொள்ள வேண்டுமெனவும் அவ்வாறு அமெரி க்காவில் நோக்கியா வெற்றியடைந்தால் அதனால் இழந்த சந்தையினை இலகுவாக மீளப்பெற முடிவதுடன் விண்டோசும் இலகுவாக சந்தையில் தனது ஆதிக்கத்தினை அதிகரிக்க முடியுமெனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# இன்டர்நெட்-இனிய தோழன்

✱ இன்டர்நெட் தான்மக்களை அவர்கள் வகிக்கும் இடத் தின் அடிப்படையில் அல்லாமல் அவர்களின் பொதுவான ஆர்வம் மற்றும் நோக்கங்களின் அடிப்படையில் சமு தாயத்தை அமைக்க உதவியுள்ளது. தமிழ் பேசுவோர், டிஜிட்டல் போட்டோ எடுப்போர், ரஜினி ரசிகர்கள், கல்லூரி தோழர்கள் எனப் பல குழு சமுதாயங்களை அமைக்க முடிகிறது. இதனால் நல்ல உறவு தொடர்கிறது.

✱ உலக மக்கள் அனைவரும் கேட்கும் வகையில் உங் கள் குரலை எடுத்துத் தரும் பெரிய மெகா போன் உண்டா? இல்லை. ஆனால் இன்டர்நெட் அந்த போனை தந்துள் ளது. நீங்கள் எது குறித்து வேண்டுமானாலும் உங்கள் கருத்தைப் பதிக்கலாம். அதனை உலக மக்கள் அனை வராலும் படிக்க முடியும்.

✱ வெறும் பேச்சு, கருத்துச் சுதந்திரம், தகவல் பரிமா ற்றம் மட்டுமல்ல வர்த்தகம் மேற்கொள்ளும் மிகப்பெரிய சந்தையாக இன்டர்நெட் மாறி உள்ளது. பலகோடிக் கணக்கான டொலர் அளவில் வர்த்தகம் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. அப்பிள் ஐ போனுக்கான பாடலா யினும் சரி நீங்கள் உருவாக்கும் சிறிய படகுக்கான உபரி உபகரணங்களானாலும் சரி இணையத்தில் உங்களால் வாங்க முடியும்.

✱ பதிவு செய்யப்பட்ட வெப்சைட்டுகளின் எண்ணி க்கை தற்போது நெட்கிராப்ட் அமைப்பின் கணக்குப்படி 25 கோடியைத் தாண்டியுள்ளது.

✱ தற்போது ஏற்பட்டு வரும் இன்டர்நெட் புரட்சி கிளவ்ட் கம்யூட்டிங் ஆகும். இணையத்திலேயே சொப்ட்வெயர் தொகுப் புகளைப் பெற்று நமக்கான பைல்களை உரு வாக்கிக் கொள்ள முடியும். நம் கணனியில் அவை தேவை யில்லை.




# ஐ.பி. முகவரி

கணனி குறிப்பாக இன்டர்நெட் பயன்பாட்டில் ஐ.பி. (IP) மிக முக்கிய தொடராகும். கணனி உலகிற்கு வெளியே (IP) என்பது ஒருவரின் (Intellectual Property) சிந்த னைச் சொத்தினைக் குறிக்கும். கணனி உலகில் இது (Internet protocol)என்பதன் விரிவாக்கமாகும். இதனை (TCP- Transmission Control Protocol) சேர்த்துக் கூறப்படுவதனை நீங்கள் பார்த்திருக்கலாம். டிசிபி/ஐ.பி. என்பது இரண்டு கணனிகள் ஒன்றுக்கொன்று தங்களுக் குள் தகவல்களைக் பரிமாறிக்கொள்ளும் ஒரு தொழில் நுட்ப வசதியைக் குறிக்கிறது.

இணைய இணைப்பில் ஒவ்வொரு கணனியும் சேர்வ ரும் (email servers IP hosts ) ஒரு ஐ.பி. முகவரியைக் கொண்டுள்ளன. சில நிறுவனங்கள் அனுப்பும் கடிதங்கள் கொண்ட கவர்களில் இந்தக் கடிதம் முகவரிக்கு அனுப்பப் பட முடியவில்லை என்றால் திருப்பி இந்த முகவரிக்கு அனுப்புக என்று ஒரு முகவரி தரப்பட்டிருக்கும். இன்டர்நெட் தகவல் பரிமாற்றத்தில் ஒரு ஐ.பி.முகவரி ஏறத்தாழ இந்தப் பணியனை மேற்கொள்கிறது.

ஐ.பி.முகவரி நான்கு எண் தொடர்களைக் கொண்டதாக அமைகிறது. எடுத்துக்காட்டாக 69.44.18.176 என்பது ஒரு ஐ.பி.முகவரி. டேட்டா அனுப்பப்படுகையில் இந்த முகவரி ஒரு போஸ்டல் ஸ்டாம்ப் போல இணைத்து அனுப்பப்படு கிறது. இதிலிருந்து ஒருவர் இந்த டேட்டா எந்த நாட்டிலிரு ந்து எந்த இன்டர்நெட் சேர்வீஸ் புரவைடர் வழியாக எந்த கணனிக்கு அனுப்பப்பட்டது என அறிந்து கொள்ளலாம்.

சில ரௌட்டர்களும் சொப்ட்வெயர் தொகுப்புகளும் இந்த ஐ.பி.முகவரியை மறைத்து அனுப்பும் வேலையை யும் செய்கின்றன. அப்படி மறைத்து அனுப்பப்படும் மெயில்களில் மறைத்து வைக்கப்பட்ட எண்ணைக் கண்ட றியும் சொப்ட் வெயர்களும் உள்ளன. ஒரு சிலர் இந்த ஐ.பி.முகவரி உள்ள கணனியை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு தங்கள் கடிதங்களை அந்த கணனியிலிருந்து அனுப்பும் வகையிலும் அனுப்புவார்கள்.

இன்டர்நெட் இணைப்பில் நிலையாக ஒரு சேர்வரைக் கொண்டு அல்லது சேர்வர் போல் இயக்கப்படும் கணனிக் குத்தான் நிலையான ஐ.பி.முகவரி தரப்படும். மற்றப்படி நாம் இன்டர்நெட் சேர்வீஸ் புரவைடரின் கணனியின் வழியாக அனுப்புகையில் அவ்வப்போது ஒரு ஐ.பி.முக வரி கிடைக்கும்.

இருப்பினும் நாம் நம் ஐ.பி.முகவரி திருட்டுப் போகாமல் வைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் சென்ற ஆண்டில் மட்டும் இதுபோன்று திருட்டு நடவடிக்கைகள் 450% உயர்ந்துள்ளதாக அன்ட்டி வைரஸ் தொகுப்பு தயாரிக்கும் நிறுவனமான சைமாண்டெக் கூறியுள்ளது. இவ்வாறு ஹேக்கர்களின் கட்டுப்பாட்டிற்குள் வரும் கண னிகளை (Bot) என அழைக்கின்றனர். சில ஹேக்கர்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வந்த கணனிகள் அனைத் தையும் ஒரு நெட்வேர்க்கில் கொண்டு வந்து இயக்கவும் செய்கின்றனர்.

இவ்வாறு நம் ஐ.பி.முகவரி திருட்டு போகாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? நம் கணனியில் உள்ள அன் ட்டி வைரஸ் சொப்ட்வெயர் மற்றும் பயர்வால்களைத் தொடர்ந்து அப்டேட் செய்ய வேண்டும்.

# இலங்கையில் வர்த்தக பற்றாக்குறை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் உள்ள இடைவெளியான வர்த்தகப் பற்றாக் குறை இதுவரை இல்லாத அளவுக்கு மிக அதிகமாகவுள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது 2011ஆம் ஆண்டு இலங்கையின் வர்த்தகப் பற்றாக்குறை 238 சதவீதம் அதிகரித்துள்ளது என்று மத்தியவங்கியின் அறிக்கை கூறுகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தை பொறுத்தவரையில் இது ஒரு அபாயகரமான நிலையையே காட்டுகிறது என்று பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பற்றாக்குறை குறுகிய காலத்தில் இரண்டு மடங்குக்கும் மேலாக அதிகரிப்பது ஆரோக்கியமான பொருளாதார நிலையாக கருதமுடியாது எனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளதும், நாட்டில் நடைபெற்று வரும் பொருளாதார அபிவிருத்திக்கு கூடுதலாக இறக்குமதிகளை செய்ய வேண்டியுள்ளதும் இந்த வர்த்தகப் பற்றாக்குறைக்கு ஒரு முக்கிய காரணம் என இலங்கை அரசு கூறுகின்றது. (பா)

# இருபது-20 உலகக் கிண்ண தொடர் இலங்கையில் நடக்கும் அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் 4 ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடரை இலங்கையில் நடத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2006ஆம் ஆண்டில் ஐ.சி.சியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரமே மேற்படி தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொண்டதாக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இப்போட்டிகளுக்காக இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு 9.4 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் மேலதிகமாக 30 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் ஐ.சி.சி. ஒதுக்கியுள்ளது.


இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சரவைத் தீர்மானம் அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# உருத்திரபுரம் இரும்புப் பாலத்தை அறுத்து திருடுவதற்கு முயற்சி; மக்களால் முறியடிப்பு

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் 4ம் குறுக்குச்சந்தியில் இருந்து ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள பாரிய இரும்பு பாலத்தை அரசியல்வாதி தலைமையிலான குழு இரும்பு வியாபாரிகளோடு சேர்ந்து அறுத்து கொள்ளையிட முயன்ற போது அப்பகுதிய மக்களால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு தடுக்கப்பட்டுள்ளனர்.





இதன் காரணமாக உருத்திரபுரம் மக்களிற்கும் பிரதான அரசியற்கட்சி ஒன்றிற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு மக்களால் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போது, அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பொன் காந்தன், கரைச்சி பிரதேச சபைத்தலைவர் குகராசா, உறுப்பினர் சி.சுப்பையா ஆகியோர் மக்களின் முறைப்பாட்டை கேட்டபோது அங்கு வந்த சம்பவத்தில் தொடர்புடைய அரசியல்வாதி இதன் பின்னணி உங்களுக்கு தெரியாது எனவும் போகபோகத்தான் தெரியவரும் எனவும் உதவி அரசாங்க அதிபர், இராணுவத்தின் அனுமதியோடுதான் இந்த பாரிய இரும்புப் பாலம் அறுத்து ஏற்றப்படுகின்றது எனவும் கடுந்தொனியில் கருத்துக்களையும் வெளியிட்டார்.

இது தொடர்பாக கரைச்சி உதவி அரசாங்க அதிபரிடம் கேட்ட போது, இப்பாலம் ஏற்றுவது தொடர்பாக எனக்கு யாரும் அறிவிக்கவில்லை என்று பதிலளித்தார். அங்கு வந்த இராணுவ அதிகாரிகளும் இது தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என்று குறிப்பிட்டுள்ளனர். இந்தநிலையில் பிரஸ்தாப அரசியல்வாதி உருத்திரபுரம் மக்களை பட்டிக்காடுகள் என்ற தொனியில் கருத்துக்களை தெரிவித்தார்.

ஒரு கட்டத்தில் இந்த இரும்பு பாலத்தை தான் கூட்டறவுச் செலவிற்கு அறுத்து விற்கப் போவதாக முன்னுக்கு பின் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டதுடன் மக்களின் கடும்சீற்றத்திற்கு உள்ளானார்.

இதேவேளை கர்ப்பிணிகள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் என சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தினம் பயணிக்கும் பிரதான ஒரு பாதையாக இந்த பாரிய இரும்புப்பாலம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## பிணை விண்ணப்பம் மேல் நீதிமன்றால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கொலை சந்தேக நபர் ஒருவருக்கான பிணை மனுவை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்தது.

ஊர்காவற்றுறை நாரந்தனை தெற்கில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் 26ஆம் திகதி போல் ரொபின்சன் ரொனி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கிலேயே மேற்படி சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் குறித்த சந்தேக நபருக்கு எதிரான சுருக்க முறையற்ற விசாரணை ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்று வருவதனாலும் பிரதான கட்சிகளுக்கு குறித்த சந்தேக நபரால் ஆபத்து ஏற்படும் என அரசு சட்டத்தரணி வி.திருக்குமரன் நீதிமன்றில் தெரிவித்த நிலையில் மேற்படி பிணை விண்ணப்பம் மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதனால் நிராகரிக்கப்பட்டது. (பா)

# மருத்துவ சங்கங்கள் நடத்தும் பிராந்திய மாநாடு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மருத்துவ சங்கம், யாழ்.மருத்துவசங்கத்துடன் இணைந்து நடத்தும் பிராந்திய மாநாடு இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

முதல்நாளான இன்று யாழ்ப்பாணம் எதிர்நோக்கும் சுகாதாரம்சார் சவால்கள் முன்னோக்கிய பாதையில் எனும் தொனிப்பொருளிலான பயிற்சிப்பட்டறையாழ்ரில்கோ சிட்டி ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம அதிதியாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் மருத்துவத்துறையின் வெவ்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்திய நிபுணர்கள், தத்தம் துறைசார் சுகாதார சேவைகளை வழங்குவதில் எதிர் நோக்கும் சவால்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

அத்துடன் யாழ்.மருத்துவப் பீடத்திலும் மாநாட்டுக்கு முன்னரான பயிற்சிப்பட்டறை ஆய்வு முன் மொழிவுகளுக்கான ஒழுக்க விதிகளின் மீளாய்வு எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.மற்றும் கொழும்பு மருத்துவப் பீடங்கள், சுகாதார அமைச்சு, இலங்கை மருத்துவச் சங்கம் போன்றவற்றில் அங்கம் வகிக்கும் துறைசார் வல்லுநர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இவ்விரு பயிற்சிப்பட்டறைகளையும் தொடர்ந்து மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக கொழும்பு மருத்துவப் பீடத்தின் நுண்ணுயிரியல் துறையைச் சேர்ந்த வாழ்நாள் பேராசிரியர் லலித மெண்டிஸும் சிறப்பு அதிதியாக யாழ்.பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், பேராசிரியை வசந்தி அரசரட்ணமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

யாழ்.மருத்துவச்சங்கத்தின் தலைவர், சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ரவிராஜ், இலங்கை மருத்துவச்சங்கத்தின் தலைவர் பேராசிரியர் வஜிர.ஜிறு.திசாநாயக்க ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து, பிரதம மற்றும் கௌரவ அதிதிகளின் உரைகள் இடம்பெற்று, அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாளான நாளை இருவேறு இடங்களில் மாநாட்டின் அமர்வுகள் இடம்பெறவுள்ளன. யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் மூன்று பகுதிகளாக அமர்வுகள் நடைபெறவுள்ளன.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் தொழில் சார் நிபுணத்துவம் எனும் தொனிப் பொருளிலான ஆய்வரங்கில் பேராசிரியர் விஜித மெண்டிஸ், பேராசிரியர் வஜிர திஸாநாயக்க, கரந்தகொட ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர்.

அதனைத்தொடர்ந்து காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள சுகாதார பாதையில் புதிய செல்திசைகள் எனும் தொனிப்பொருளிலான ஆய்வரங்கு திருமதி எஸ்.தனேஸ்வரி மற்றும் வைத்திய கலாநிதி பாலகுமார் ஆகியோர் தலைமை வகிக்க, பேராசிரியர் வஜிர திஸாநாயக்க, வைத்திய கலாநிதி கேதீஸ்வரி சிவசிதம்பரம், வைத்திய கலாநிதி கபில ஜெயரத்ன ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகவுள்ள தொற்றா நோய்கள் எனும் தொனிப்பொருளிலான ஆய்வரங்கு நடைபெறவுள்ளது.

இவ் ஆய்வரங்கில் வைத்திய கலாநிதி பிரசாத் கட்டுயந்த, வைத்திய கலாநிதி மல்வாராச்சி, வைத்திய கலாநிதி கொட்வின் கொன்ஸ்ரன்ரைன் வைத்தியகலாநிதி லசந்த மாலவிகே, வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன், வைத்திய கலாநிதி எம்.துரைராஜா, வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமாரன், வைத்திய கலாநிதி லங்கா திஸாநாயக்க, வைத்திய கலாநிதி சரத் அமுனுகம ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

அதனைத்தொடர்ந்து கலந்துரையாடல் உடன் ஆய்வரங்குகள் மாலை 4.30 மணிக்கு நிறைவடைகின்றன.

அத்துடன் நாளை மற்றுமொரு பயிற்சிப் பட்டறை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்னாள் அமைந்துள்ள மருத்துவபீட மாணவர் விடுதியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவ ஆய்வுக்கான அடிப்படைப் புள்ளி விபரவியல் எனும் தொனிப்பொருளிலான இப்பயிற்சிப்பட்டறையில் பல்வேறு ஆய்வு முறைகள், தரப்பகுப்பாய்வு தொடர்பான விளக்கங்களும் கருத்துரைகளும் ராகம மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் வைத்திய கலாநிதி கிரிஷாந்த அபேசேகரவால் வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் நாளான நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு இலத்திரனியல் சுகாதாரம் – வாய்ப்புகளும் சவால்களும் எனும் தொனிப்பொருளிலானபயிற் சிப்பட்டறையில் சுகாதார அமைச்சைச் சேர்ந்த வல்லுநர்களும்பல்கலைக்கழக பேராசிரியர்களும் கலந்து கொண்டு கருத்துரைவழங்கவுள்ளனர். அதனைத்தொடர்ந்துமாலை3.00மணியளவில் நிறைவுரைகளுடன் மாநாடு நிறைவுபெறும். (பா)

## ஊடகத்துறைக்கு தனி அதிகார சபை

(கொழும்பு)

ஊடகத்துறையை மேம்படுத்த தனி அதிகாரசபை அமைக்கப்பட உள்ளது. கடந்த காலங்களில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சடலத்தைக் கண்டும் கூட நம்பாத எத்தனையோ ஊடகவியலாளர்கள் நாட்டில் இருந்தார்கள்.

இவர்கள் எவரும் தற்போது நாட்டில் இல்லையென்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (பா)

## புதிய தபால் மா அதிபராக ரோஹண அபேரத்ன நியமனம்

(கொழும்பு)

இலங்கையின் புதிய தபால் மா அதிபராக ரோஹண அபேரத்ன நியமிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் சிரேஷ்ட பதில் செயலாளராகக் கடமையாற்றும்ரோஹண அபேரத்ன, இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் தர சேவையில் உள்ளார்.

புதிய தபால் மா அதிபர் நியமனத்திற்குக்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## செனட் சபையை...

அதனை த.தே.கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளமாட்டது.

அத்துடன் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் த. தே. கூட்டமைப்பிற்கும் அரசுக்கும் இடையில் இடம்பெற்று வரும்பேச்சுவார்த்தைகளில்மூன்றாம் தரப்பின் பங்கு அவசியமாகவுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சி னைக்கு உள்நாட்டில் தீர்வுகாண முடியாத கட்டத்தில் 1987-ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 2002 ஆண்டு இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு நோர்வே சமாதான நடவடிக்கைகளில் மத் தியஸ்தம் வகித்தது.தற்போதும் அவ் வாறான சூழல் ஏற்பட்டுள்ள நிலை யில்மூன்றாம் தரப்பு அவசியமானது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு வில் பங்கேற்பது தொடர்பாக நாம் எமது நிலைப்பாட்டை ஏற்கெனவே தெளிவாகத் தெரிவித்துவிட்டோம். அரச தரப்புடன் நாம் கடந்த ஒரு வருடமாக நடத்தும் பேச்சுவார்த்தைக ளில் இணக்கப்பாடு ஏற்பட்டால் மட் டும் அதனைப் நாடாளுமன்றத் தெரி வுக் குழுவுக்குக் கொண்டு சென்று விவாதிப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். சிறிலங்கா அரசா ங்கத்துடன் இதுவரை நடை பெற்ற பேச்சுவார்த்தைகளில் எந்த விதமான இணக்கப்பாடும் ஏற்பட்டுவிடவில்லை. இந்த நிலையில் தான் நாடாளுமன் றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள் ளுமாறு அரசு அழைக்கின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு வில் நாம் பங்கேற்க வேண்டும்என அரசாங்கம் இதுவரை உத்தியோக பூர்வமான முறையில் எமக்கு அழை ப்பு விடுக்கவும் இல்லை. எமது நிலைப் பாடு என்ன என்பதனை அரசாங் கத்துக்கும், ஜனாதிபதிக்கும் தெளி வாக எடுத்துக் கூறியும் இருக்கின் றோம்.

இலங்கையின் இனப்பிரச்சி னைக்கான அரசியல் தீர்வு தொடர் பில் இரு தரப்பினருக்கும் இடை யில் இடம்பெற்று வரும் பேச்சு வார்த்தைகளில் முதலில் ஒரு இணக் கப்பாடு வரவேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தோம். இருந்த போதிலும் எமது நியாயப்பாட்டை அரசாங்கம் புரிந்து கொண்டிருப் பதாக தெரியவில்லை என சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.


## தமிழக மீனவர் நால்வர் மீட்பு

(யாழ்ப்பாணம்)

படகு பழுதடைந்த நிலையில் நடுக் கடலில் தத்தளித்த தமிழக மீனவர்கள் நால்வரை நெடுந்தீவு கடற்படையினர் மீட்டு அழைத்து வந்துள்ளனர்

இம் மீனவர்கள் நால்வரும் நெடுந்தீவு கடற்படை முகாமில் பாதுகாப்பாக இருக்கிறார்கள் எனவும் அவர்களை இந்திய கடற் படை ஊடாக நாடு செல்ல நடவடி க்கை எடுக்கப்படுமென கடற்படை யினர் தெரிவித்துள்ளனர்.(பா)

## பாரவூர்தி தடம் புரண்டது



(மல்லாவி)

ஏ9 வீதியில் உள்ள கிழவன்குளம் ஒலிபரப்பு கோபுரத்திற்கு முன்பாக பாரவூர்தி ஒன்று தடம் புரண்டது. இச்சம்பவம் நேற்று அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரியவருவது, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பொருட்களை ஏற்றிவந்த பாரவூர்தி கிழவன்குளம் ஒலிபரப்பு கோபுரத்தடியில் தடம் புரண்டுள்ளது.

இப்பாரவூர்தியின் சாரதியும் நடத்துனரும் காயங்கள் ஏதுவுமின்றி தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர். பல இலட்சம் ரூபாய் பெறுமதி யான பொருட்கள் சேதமடைந்துள்ளது. (பா-3-15)

## தமிழ் அரசியல்

மனோ கணேசன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

மகசின் சிறைக் கலவரம் நாடு முழுக்க வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பதற்றத்தை ஏற் படுத்தியது. குறிப்பாக சிறைக் கைதி களின் குடும்ப உறவுகள் மிகவும் பீதிய டைந்த நிலையில் இருந்தார்கள். உண்மையில் தமிழ்க் கைதிகள் தாக் கப்படுகிறார்கள் என்றே ஆரம்பத் தில் தமிழ் மக்கள் மத்தியில் வதந்தி பரவியது. கடந்த காலங்களில் சிறை களுக்குள் இன ரீதியாக நடைபெற்ற சம்பவங்களை எண்ணி இந்தப் பதற் றமும் பீதியும் ஏற்பட்டதென்பது புரி ந்து கொள்ளக் கூடியது. அதிர்ஷ்ட வசமாக நடந்த கலவரம் இன ரீதியா னதாக இருக்கவில்லை. என்றாலும் இந்த சம்பவம் தமிழ்க் கைதிகளின் பரிதாப நிலைமையை படம் பிடித்துக் காட்டுகின்றது.

அரசாங்கத்தின் உடன் நடவடிக் கை காரணமாக தமிழ்க் கைதிகள் வேறு சிறைக்கூடங்களுக்கு மாற்றப் பட்டுள்ளார்கள். இது தமிழ்க் கைதி களின் விசேட பிரச்சினையை அர சாங்கம் அறிந்து சிந்தித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. இந்தச் சிந்தனை தொடர வேண்டும். இது அரசியல் காரணங்களுக்காக குற் றம் புரிந்தார்கள் என்ற சந் தேகத் தின் அடிப்படையில் நீண்ட கால மாக சிறை வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் தொடர்பில் புதிய ஒரு கொள்கை மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். தமிழ் அரசியல் கைதி கள் சிறைச்சாலை திணைக்களத்தி லிருந்த அகற்றப்பட்டு புனர்வாழ்வு திணைக்களத்தின் கீழ் புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப் பட வேண்டும்.

இதைச் செய்வதன் மூலம் தமிழ் கைதிகளின் குடும்பத்தவர் களுக்கும் தமிழ் மக்களுக்கும் உங் கள் நல்லெண்ண சமிஞ்ஞையை காட்டுங்கள். அரசியல் காரணங்க ளுக்காக குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் தண்டனை வழங்கப்பட் டுள்ள தமிழ் கைதிகள் மீது சிறைக் கூடங்களுக்குள் தாக்குதல்கள் நடை பெற்றுள்ளன.

1983-ல் வெலிக்கடை, 1987 -ல் பூசா, 1997-ல் களுத்துறை, 1997 -ல் மகசின், 2000-ல் களுத் துறை, 2001-ல் பிந்துனுவெல, 2009-ல் மகசின், 2011-ல் போகம் பரை, 2011 -ல் பதுளை, 2011 -ல் கொழும்பு சி.ஆர்.பி, 2011-ல் வெலிக்கடை பெண்கள் பிரிவு என மேற்கண்ட சிறைக் கூடங்களில் தமிழ் கைதிகள் மீது தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

விடுதலைப்புலிகளின் அங்கத் தவர்கள் புனர்வாழ்வு அளிக்கப் பட்டு விடுதலை ஆகும் பொழுது அவை நல்லெண்ண சமிஞ்ஞைக ளாக அமைகின்றன. இந்த கைதிகள் மிக நீண்ட காலமாக சிறை வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். எனவே அவர் களுக்கும் புனர்வாழ்வு பயிற்சிகள் அளிக்கும் வண்ணம் புனர்வாழ்வு நிலையங்களை அமையுங்கள் என கேட்டுக்கொள்கிறேன். இதற்கான சட்ட திருத்தங்கள் அவசி யமானால் அவற்றை நாடாளுமன்றில் கொண்டு வர ஆவன செய்யும்படி கேட்டுக்கொள் கிறேன் என அதில் உள்ளது. (பா)

**English Spoken Class**

அரச, தனியார் ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் யாவருக் குமான Spoken Class வீடுக ளுக்கு வந்து கற்பிக்கப்படும். Spoken with Grammar அடிப் படையில் இருந்து கற்பிக்கப் படும்.

தொடர்பு:-
0777110523 (7375)

## 13+ தான்...

தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசி யக் கட்சியுமே காலம் கடத்துகின்றன. எனவே அரசாங்கத்தை யாரும் குறை கூறக்கூடாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வி னால் தெரிவிக்கப்பட்டுள்ள 13 வது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகார பரவலாக்கல் என்பது செனட் சபை அமைப்பதனைத்தான் திம்பு வில் ஆரம்பமான பேச்சுவார்த்தை முதல் இன்று வரையும் இதே நிலை நீடித்து வருகின்றது. பேச்சுவார்த் தைக்கு வருவது பின்னர் ஏதாவது ஓர் காரணத்தை காட்டி அதிலிருந்து விலகுவது வாடிக்கையாகிப் போய் விட்டது.

இதனை நோக்கும்போது இந்தச் செயற்பாட்டில் அரசியல் இலாபம் கருதப்படுவது போன்று புலனா கின்றது.

உண்மையிலேயே பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் யாரு க்கு தேவை? வடபகுதி மக்களுக்கா? அல்லது அரசியல்வாதிகளுக்கா? எனக் கேள்வி எழுப்பினார்.(பா-11)

## ஐ.நா.அமைதிப்படைக்கான ஆணைக்குழுவில் சவேந்திர

ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி யான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அமைதி காக்கும் செயற் பாடுகளுக்கான ஆலோசனைக் குழுவுக்கு ஐ.நா. செயலாளர் பான் கீ மூனினால் தெரிவு செய்யப்பட் டுள்ளார்.

ஐ.நா. அமைதிகாக்கும் நடவடிக் கைகளுக்கு படைகளை அனுப்பும் நாடுகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை வழங் குவதற்காக இந்நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

அமைதி காக்கும் செயற்பாடு கள் தொடர்பாக இத்தகைய பதவி ஒன்றிற்கு இலங்கையர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதற்தடவையாகும்.

மேற்படி குழுவில் ஆசிய - பசு பிக் நாடுகளை மேஜர் ஜெனரல் சவேந்தர சில்வா பிரதிநிதித்துவப் படுத்தவுள்ளார். சவேந்திர சில்வா வை போர்க் குற்றவாளி என சர்வ தேச மனித உரிமை அமைப்புக் கள் கூறிவரும் நிலையில், ஐ.நா செயலாளர் பான் கீ மூன் இந் நிய மனத்தை வழங்கியுள்ளார்.(பா)

## மகசீன் சிறை...

ஆவணங்கள் அழிவடைந்துள் ளமையினால் சிக்கல்கள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது என சிறைச்சாலை ஆணையாளர் ஜீ. டபிள்யூ.கொடிப்பிலி தெரிவித்தார்.

கைதிகள் பற்றிய தரவுகளை திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்பட உள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.(பா)

## யாழ்.மாநகர...

சபை உறுப்பினரான சுவீகரன் நிஷாந்தன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சியிலிருந்து நீக்கப் பட்டதனால் அவரது உறுப்பினர் பதவியை இழந்துள்ளார் என யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணை யாளரும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவல ருமான பொ.குகநாதன் யாழ்ப்பா ணம் மாநகர சபை ஆணையாள ருக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

அத்தோடு உள்ளூர் அதிகார சபைகள் கட்டளைச் சட்டத்தின்(262 ஆம் அதிகாரம்) 10 அடு (அ) பிரி வின் கீழான அறிவித்தலொன்று அரசாங்க வர்த்தமானி பத்திரிகை யில் பிரசுரிக்கப்படுவதற்காக தேர் தல்கள் ஆணையாளருக்கு கடந்த 23 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள் ளமை தெரிவத்தாட்சி அலுவலக ரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு யாழ். மாநகர சபை முதல் வர் மேலும் தெரிவித்துள்ளார். (பா-6)

## ஐ.நா.மனித...

மன்றத்தில் கடந்த வருடமே சமர்ப் பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் ஆணையகத்தின் கூட்டத் தொடர் மார்ச் மாதம் நடைபெறவுள் ளமையால் நல்லிணக்க ஆணைக் குழுவினால் முன்மொழியப்பட்ட சிபார்சுகளை அரசாங்கம் அமுல் படுத்த சுமார் இரண்டு மாதங்கள் உள்ளது என அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்தோனேஷிய வெளி விவகார அமைச்சர் கலாநிதி மார்டி நட்டலெகவும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டார். (பா)

## சர்வதேச

கட்டம் கட்டமாக இந்த நிதி உத வியை வழங்குவதற்கு சர்வ தேச நாணய நிதியம் இண ங்கியிருந்தது.

நாட்டின் பொருளாதார நிலைமையை கண்காணி ப்புச் செய்யும் நோக்கில் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் குழுவொன்று தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

ரூபாயின் பெறுமதியை தக்கவைத்துக் கொள்வதற் காக மேற்கொள் ளப்படும் முய ற்சி ஒட்டுமொ த்த பொருளா தாரத்தில் பாதி ப்பை ஏற்படுத் தியுள்ளதாக குறிப்பிடப்படுகி ன்றது.

இதேவேளை, நாட்டின் பொரு ளாதாரம் வலுவான நிலையில் காணப்படுகின் றது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள் ளார்.(பா)

## பருத்தித்துறை...

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர் புடைய பல தடயங்கள் கிடைத்துள்ள தாகவும் இரு சந்தேக நபர்களைத் தேடிவருவதாகவும் பொலிஸார் குறிப் பிட்டுள்ளனர்.

இதேவேளை பிரஸ்தாப மாணவி யின் வாயில் பிளாஸ்ரர் ஒட்டப்பட்டு கழுத்துப் பகுதியில் கூரிய ஆயுதம் ஒன்றினால் குத்திக் கொலை செய்யப் பட்டுள்ளார். எனினும் பாலியல் பலா த்கார முயற்சி இடம்பெறவில்லை என பருத்தித்துறைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர் (பா)

## இலங்கையின்...

ஆய்விலேயே இதனைத் தெரிவித் துள்ளது.

ஐ.நா.சபையின் பாதுகாப்புப் பேரவை மற்றும் மனித வுரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றில் உள்ள தனது உறுப்பினர் அந்தஸ்தை பயன் படுத்தி வெளிநாடுகளில் நிகழும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் குரல் கொடுக்க இந்தியா தவறியுள்ள தாக அவ்வறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அத்துடன் சிரியா போன்ற நாடு களில் இடம்பெற்ற கொடூரமான மனித வுரிமை மீறல்கள் குறித்தும் இந்தியா மௌனமாகவே இருந்து விட்டதாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகத் தால் வெளியிடப்பட்டுள்ள அவ்வறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பா-11)

**NIRU**
**KONDAVIL**
**A/L வர்த்தகப்பிரிவு**

| | | |
|---|---|---|
| கணக்கீடு | - | திரு. S. தவா |
| பொருளியல் | - | திரு. P. சண் |
| வணிகக்கல்வி | - | திரு. S. யசோ |

A/L 2012, 2013, 2014, 2012 Day வகுப்புகள் நடைபெறுகின்றது.

**திசைகாட்டியின் விசா விழிப்புணர்வு**

வெளிநாட்டில் கல்வி பயில விரும்புபவர்கள் கல்லூரிக் கட்டணத்தை தனியார்களிடம் கையளிக்காது வங்கி ஆணை (Bank Draft) மூலம் செலுத்துங்கள். இதன் மூலம் மோசடிகளைத் தவிர்க்கலாம்.

இது சமூக நலன் கருதிய தகவல்

திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212219016 (C-5683)

**அவுஸ்திரேலியா குடும்ப விசா**

அவுஸ்திரேலியா குடும்பத்துடன் 5 வருட கால விசாவிற்கு இலவச சட்ட ஆலோசனை
இறுதித் தினம் 07.02.2012

திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212219016 (சி-5683)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.